பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 12 சனிக்கிழமை (28.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 002

# ஜனவரி 26 இல் ஜனாதிபதித் தேர்தல்

# 17 முதல் வேட்பு மனுக்கள் தாக்கல்

## தமிழர் ஒருவரைக் களத்தில் நிறுத்த முயற்சி

கொழும்பு, நவம்பர் 28

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதிமுதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர்**

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணிதம் I,II பாடத்துக்கான மாதிரி வினாத் தாள்கள்.

## பொன்சேகாவை மடக்க அரசு முயற்சி; ஆயுதக் கொள்வனவு முறைகேடு குறித்து விசாரணை

கொழும்பு, நவ. 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மடக்குவதற்கு அரசு பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்று தகவல்கள் கசிந்துள்ளன.

ஜெனரல் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தபோது அமெரிக்காவின் 'ஹிகோர்ப்' நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதத் தளபாடங்களின் கொள்வனவில் ஏதேனும் ஒழுங்கீனங்கள், முறைகேடுகள், ஊழல்கள் இடம்பெற்றுள்ளனவா என்று உடன் விசா

(20ஆம் பக்கம் பார்க்க)

## "முஸ்லிம்களுக்கு சுதந்திரமான சூழ்நிலையை உருவாக்கியவன் நானே" - சரத்பொன்சேகா

கொழும்பு, நவ. 28

"வடக்கு, கிழக்கில் முஸ்லிம்கள் தற்போது தமது மதத்தை சுதந்திரமாக பின்பற்றுவதற்கான சூழல் ஏற்பட்டமைக்கு நானே காரணம்" என எதிர்க்கட்சியின்பொது வேட்பாளரான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்குப் பங்கமாகப் பேசினார் என்று சீமான் கனடாவில் கைதாகி நாடு கடத்தப்பட்டார்

கொழும்பு, நவ. 28

கனடா அரசின் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான கொள்கைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் பேசினார் என்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 'நாம் தமிழர்' இயக்கத்தின் தலைவர் இயக்குநர் சீமானை கனடா அதிகாரிகள் கைது செய்து இந்திய விமானத்தில் ஏற்றி அனுப்பி நாடு கடத்தியுள்ளனர்.



பெருமளவிலான ஈழ மக்கள் இரவோடு இரவாகதிரண்டு விமான நிலையத்தில் நிற்க அவரை அதிகாரிகள் கொண்டுவந்து விமானத்தில் அனுப்பி வைத்தனர். நேற்று இரவு 12.30 மணிக்கு அவர் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடையவிருந்தார். அவருக்குத் தமிழகத்தில் உள்ள தமிழ் உணர்வாளர்களும், 'நாம் தமிழர்' அமைப்பினரும் சிறப்பான வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

மாவீரர் தின நிகழ்வில் கலந்துகொள்ள கனடா சென்ற அவர் கனேடிய நேரம் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆற்றிய உரை, பயங்கரவாதம் குறித்து கனடா பின்பற்றும் சட்டவிதிமுறைகளுக்கு முரணாக அமைந்தது என்ற வகையில் அவர் கனேடிய பொலி

(20ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றப்பட்ட மக்கள் வாக்களிக்க சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படும்

### அமைச்சர் ரிஷாத் சொல்கிறார்

கொழும்பு, நவ. 28

இடைத்தங்கல் முகாம்களிலிருந்து மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும் என மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் ஜனவரிமாத இறுதிக்குள் இடைத்தங்கல் முகாம்களிலுள்ள அனை

(20ஆம் பக்கம் பார்க்க)

## எம்.ஐ.24 ரக யுத்தக் ஹெலிகொப்டர் வீழ்ந்து நொருங்கியது; நால்வர் பலி!

பதுளை, நவ. 28

இலங்கை விமானப்படையின் எம்.ஐ. 24ரக ஹெலிக்கொப்ரர் ஒன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மொனராகலை மாவட்டம் புத்தல பகுதியில் இருந்து 5 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள காட்டுப்பகுதியில் வீழ்ந்து வெடித்துச் சிதறியுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை பொது வேட்பாளராக ஏற்க ஐ.தே. முன்னணித் தலைவர்கள் இணக்கம்

கொழும்பு, நவ. 28

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் 14 கட்சிகளும் ஜெனரல் சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த முன்னணியில் அங்கம் வகிக்கும் 14 கட்சிகளும் கொள்கை அளவில் சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக நிறுத்த இணக்கம் கண்டுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று ஐ.தே.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடி இந்த முடிவை எடுத்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் நேற்று மாலை தமது தீர்மானத்தை உத்தியோக பூர்வமாக ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தனர்.

இந்த 14 கட்சிகளில் தலைவர்கள் முன்னிலையில் ஐ.தே.காவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனை அறிவித்தார். (அ-சி)

## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டிருந்தால் நந்திக்கடலில் இன்று படகோட்டியிருப்பாராம் பிரபாகரன்

### அமைச்சர் மைத்திரிபால கூறுகிறார்

கொழும்பு, நவ. 28

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டிருந்தால் நந்திக்கடலில் இன்னும் பிரபாகரன் படகோட்டியிருப்பார். - இவ்வாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பிரபாகரனை அழிக்கும் நடவடிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலை

(20ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
>AC/Non AC Rooms (with all Facilities)
> Conference/ Party Hall (75 Persons)
> Special Function Menus (buffet style)
கொசி உணவகம்
Feel like home
இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், ... HOTLINE: 021 2225899
Introducing Special North Indian Break fast 06.00am to 10.00am
யாழ் நகரிலும் கொழும்பிலும் சுவையான, தரமான Indian, Chinese, Jaffna Foods

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கான்பூர் டெஸ்டில் இலங்கை படுதோல்வி!

இந்தியாவுக்கு எதிராக க்ான்பூரில் நடந்து முடிந்த 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி படுதோல் வியடைந்தது. கடந்த 24ஆம் திகதி ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 642 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

பின்னர் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸை விளையாடியது. அதில் 229 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் 413 ஓட்டங்களால் பின் தங்கியிருந்தது. இதனால் இரண்டாவது இன்னிங்ஸையும் இலங்கை அணி விளையாட நேர்ந்தது.

அதன்படி நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது இலங்கை அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 57 ஓட்டங்களைப் பெற்று இன்னிங்ஸ் தோல்வியை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தது.

தொடர்ந்து நேற்று நான்காவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணியின் துடுப்பாட்டத்தை இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதனால் இலங்கை அணி ஒரு நாள் மீதமிருக்கையிலேயே ஓர் இன்னிங்ஸ் மற்றும் 144 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

அதன்படி நேற்றைய தினம் இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் சமரவீர மட்டும் கடைசிவரை ஆட்டமிழக்காது களத்தில் போராடிக்கொண்டிருந்தார். இவர் 78 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

ஏனைய வீரர்களான மத்யூஸ் (15), பிரசன்ன ஜெயவர்த்தன (29), ஹேரத் (13), முரளிதரன் (29), மெண்டிஸ் (27), வெலகெதர (4) ஆகியோர் குறுகிய ஓட்டங்களுடன் வெளியேறினர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுகளையும், ஒயா 2 விக்கெட்டுகளையும், சஹீர்கான், சிறிசாந்த், ஷேவாக், யுவராஜ் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடிய சிறிசாந்த் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 3 போட்டிகளைக் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

## மறவன்புலோ வள்ளக்குளம் வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான பிராயச்சித்த அபிஷேகம் தொடர்பான அறிவித்தல்

மேற்படி ஆலயத்தில், பத்து ஆண்டுகளின் பின்னர் பிராயச்சித்த அபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை (30.11.2009) நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம். 03.12.2009 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி அபிசேக நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் 30.11.2009 திங்கட்கிழமை என மாற்றப்பட்டுள்ளது என்பதை சகல அடியவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி கெங்காதரம்



துவானி வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி கெங்காதரம் 25.11.2009 புதன் கிழமை காலமானார்.

அன்னார் கெங்காதரத்தின் அன்பு மனைவியும், லுயிந்தன், ரதி, விஜிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் ஐயாத்துரை, இரத்தினத்தின் மூத்த மகளும், சுப்பிரமணியம், யோகேஸ்வரி, பத்மாவதி, கோபாலரட்ணம் (அமரர்) ஆகியோரின் சகோதரியும், இராசதுரை - சின்னம்பாள் (அமரர்) ஆகியோரின் மருமகளும், ரகுராதா, ரமணி, சசிகலா, ஜெயகலா, பரமேஸ்வரி, சந்தனகோபால் ஆகியோரின் மைத்துனியும், பகீதரன், சுதர்சன் ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

துவானி வீதி, இலையானைன் மேற்கு, உடுப்பிட்டி. (ஒ/562767)

தகவல்: குடும்பத்தினர். [ரஜனி பீடா ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி]


## படிவம்

1. வடமாகாண பாடசாலைகளில் அழகியற்கல்வி ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் நியமனம் பெறுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தல்.
2. மக்கள் சபை (ஜன சபா)ச் செயலாளர் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்த்தல்.
3. க.பொ.த. (உ.த) 2010 பரீட்சைக்கு வெளிவாரிப் பரீட்சார்த்திகள் மதிப்பீட்டிற்காக தம்மைப் பதிவு செய்தல்.

ஆகிய படிவங்கள் விற்பனைக் உண்டு.

Bharathy Pathippakam, 430, K.K.S. Road, Jaffna.

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்போட் இறைச்சிக் கோழி மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(சுத்தம் செய்தல் இலவசம்)
A.S.S. பாம், தியேட்டர் வீதி, இணுவில்.

## ராஜீ திருமண சேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் 33 வயது செவ்வாய் அற்ற புனர்பூச நட்சத்திரம் ஜேர்மனி PR மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.
021-3735980/0774745647.

## விற்பனைக்கு

2010 ஆம் ஆண்டுக் கலண்டர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (விளம்பரங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும்)

தொடர்பு: STR மல்ரி சென்ரர், 45 A ஆடியபாதம் வீதி, (ஒ/562770) திருநெல்வேலி.
T.P: 0779257488, 0777570150

## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிக்கு (தரம் 1-O/L வரை) தமிழ் மொழி மூலம் அல்லது ஆங்கில மொழி மூலம் கற்பிக்கக்கூடிய பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், அலுவலக உதவியாளரும் தேவை.

(92603) தொடர்பு: 0774598440

## லண்டனில் தொழில் வாய்ப்புடன் கூடிய உயர் கல்வி

O/L, A/L பரீட்சை முடித்து விட்டீர்களா?

வாருங்கள் எம்மோடு இதனை இங்கிலாந்தின் முதற்தர தனியார் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பைத் தொடர்வதற்கு நம்பவே முடியாத அளவுக்கு குறைந்த செலவில் பயண ஏற்பாடுகளை செய்து தருகிறோம்.

- பகுதி நேர வேலையுடன் கூடிய கல்வி.
- இலகுதவணையில் கல்லூரிக்கட்டணத்தை செலுத்தும் வசதி.
- சேவைக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு: THERESA INN, 72 'A' Racca Road, Chundikuli, Jaffna
T.P.NO. 0215670309, 0772299900


## பாடசாலைகளுக்கு நடமாடும் ஆய்வு கூடம்

யாழ்ப்பாணம், நவ.28

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மக்கள் மீளக்குடியேற்றம் இடம்பெறும் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு மாகாண கல்வி அமைச்சினால் நடமாடும் ஆய்வு கூடங்கள் வழங்கப்படவுள்ளன.

நடமாடும் ஆய்வுகூடம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி துணுக்காய் கல்வி வலயத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளுக்கும் நடமாடும் ஆய்வுகூடங்கள் வழங்கப்படவுள்ளனவென்றும் தெரிவிக்கப்பட்டது.

மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆய்வுகூடங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வார்.

(ஒ - 207)


# யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

**Post Graduate Diploma in Management (Pre.MBA)**
(MBA final (Topup) in UK / London) [காலம் 9 மாதங்கள்]
To Whom: பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

**Diploma in English** 100 % வெற்றி
100 % பயிற்சி Advanced Diploma in English [காலம் 6 மாதங்கள்]
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

**Foundation Diploma In Hospitality Management** (Topup degree in UK / London)
[காலம் 6 மாதங்கள்] Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது. மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**Access Programming**
(Foundation Degree Programme) [காலம் 6 மாதங்கள்]
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L வில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருமானம் நல்ல வேலைவாய்ப்பு **Foundation Diploma In Nursing** (Health & Social Care) Topup degree In UK / London [காலம் 6 மாதங்கள்]
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

**Foundation Diploma in Management** [காலம் 6 மாதங்கள்]
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச் சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
[illegible]


# இன்று தீர்க்கமான நாள்!

பாகிஸ்தான்-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்ட நேரமுடிவில் நியூஸிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 147 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவின்போது 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 307 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி, தனது இன்னிங்ஸை நேற்றுத் தொடர்ந்து விளையாடியது.

அதன்படி முன்னைய நாள் களத்தில் இருந்த மொகமட்டும் மொகமட் ஆஸிப்பும் களமிறங்கினர். இவர்கள் இருவரும் களமிறங்கி சிறிது நேரத்தில் ஆட்டமிழந்தனர். மொகமட் ஆமீர் 26 ஓட்டங்களையும் மொகமட் ஆஸிப் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். சயீட் அஜ்மல் ஆட்டமிழக்காமல் 2 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 147 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில் மொகமட் ஆஸிப் 4 விக்கெட்டுக்களையும் மொகமட் ஆமீர் 2 விக்கெட்டுக்களையும் உமர் குல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றை ஆட்டம் முடியும்போது நியூஸிலாந்து அணி, பாக். அணியை விட 244 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### தங்கராசா திலகபூவதி (நாகம்மா)

முகமாலையைப் பிறப்பிடமாகவும் தாமோதரம்பிள்ளை வீதி, அரசடி, சங்கத்தானையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா திலகபூவதி (நாகம்மா) நேற்று (27.11.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசாவின் அன்பு மனைவியும், வள்ளிப்பிள்ளையின் அன்புச் சகோதரியும், விக்கினேஸ்வரன் (சிறி), கணேசலிங்கம் (கணேஸ்), யோகேஸ்வரன் (ஜெயம்), தர்சினி ஆகியோரின் தாயாரும் கருணாதேவி, சுசிலாதேவி, பாலினி, பாஸ்கரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமோதரம்பிள்ளை வீதி, அரசடி, சங்கத்தானை.*

தகவல்: மருமகன், K.பாஸ்கரன் (பாலன்).

### மூத்தார் வைரமுத்து (வெள்ளையப்பா)



போயிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம், கீரிமலை வீதி, காளையப்பட்டியை நிரந்தர வதிவிடமாகவும், தற்போது கட்டுடையில் வசித்தவருமாகிய மூத்தார் வைரமுத்து நேற்று (27.11.2009) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்தார் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பெரியார்-சீதேவி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அசுபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, சின்னம்மா, சின்னத்துரை (செல்வமணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராசா (இளைப்பாறிய பிரதி அதிபர், அருணோதயாக்கல்லூரி), அன்னலட்சுமி, சூரியகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வமலர், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (வாணம்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரகுவர்மன், ராகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2009) சனிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி: கட்டுடைச் சந்தி அருகில், கட்டுடை, மானிப்பாய். (92606)

தகவல்: குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி கந்தையா



யாழ்ப்பாணம், உடுவிலைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா நேற்று முன்தினம் (26.11.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாச்சிமுத்து-தெய்வானை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், தவரஞ்சிதமலர், நகுலேஸ்வரி, நகுலேஸ்வரன், கோணேஸ்வரி, கோணேஸ்வரன், மகேஸ்வரன், மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன், கந்தசாமி, ஹேமலதா, லோகநாதன், புவீந்திராதேவி, தேவராணி, இரட்னேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், சசிரேகா - காளிதாஸ், பிருந்டா கௌரி - தவராஜேஸ்வரன், பிரபாஞ்சலி - விக்னேஸ்வரன், அர்ஜீன், நிஷாந், வினுஜா, சர்மிளா, திலீபன், அக்ஷயா, ஜநார்த், வினுஷன், லக்ஷா, அபிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், கிருதயா, அட்சயன், வக்ஷன், மகிழினி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

10 A, பிறவுண் வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (92602)

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தவறான கருத்தியல் கணிப்பீடு

தென்னிலங்கை அரசியல் களம் போகின்ற போக்கைப் பார்த்தால் இந்தத் தேசத்தில் இனப்பிரச்சினை என்ற ஒரு தேசியப் பிணக்கு உள்ளது என்ற பிரக்ஞையே தென்னிலங்கைக்கு இல்லை என்பது போலவே எண்ணத் தோன்றுகின்றது.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளுள் ஒரு பிரிவினர் தமிழர்கள்.

இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட விடயத்தில் அவர்களின் உணர்வெழுச்சி பல்வேறு வடிவங்களில் காலங்காலமாக வெளிப்பட்டு வந்துள்ளது. ஆரம்பத்தில் காந்தியப் பாதையில் - அஹிம்சை முறையில் - அறவழிப்பட்ட நெறியில் - அது முன்னெடுக்கப்பட்டது. ஆனால் காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் அந்த எழுச்சி உணர்வுகளை ஆரம்பம் முதலே தமது அதிகாரப்பலத்தைக் கொண்டு நசுக்கிவந்தன.

இன ரீதியான அரச ஒடுக்குமுறையின் வரலாற்றுப் பெறுபேறாகப் பிறப்பெடுத்த தமிழ்த் தேசிய எழுச்சியானது ஒருபுறம் கருத்தியல் சிந்தனையாகவும் மறுபுறம் திண்ணிய அரசியல் இயக்கமாகவும் இரு பரிமாணங்களைக் கொண்டதாக விரிந்தது.

சுதந்திரம், தர்மம், கௌரவம், நீதி முறைமை என்ற ஆழமான அரசியல் அபிலாஷைகளைக் கொண்ட இந்தக் கருத்தியலை நிலைநிறுத்துவதற்கான தேசிய எழுச்சி, அஹிம்சை முறையிலே முன்னெடுக்கப்பட்டபோது, அரச அதிகாரத்தின் ஆயுத பலத்தால் - பலாத்கார வழியில் - அடக்கப்பட்டதே தவிர, அந்த எழுச்சியின் அடித்தளமாக விளங்கிய நியாயம் செவிமடுக்கப்படவேயில்லை.

அதன் விளைவாக இந்த எழுச்சியின் வெளிப்பாடான அரசியல் இயக்கம், ஆயுதம் தாங்கிய போராட்ட நிலையை நோக்கி, ஆட்சித் தரப்பினாலேயே நெட்டித்தள்ளப்பட்டது. அஹிம்சை வழிப் போராட்டங்கள் ஆயுத முறையில் முறியடிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டமையால், தமிழ் இளைஞர்கள் நியாயம் வேண்டி - கௌரவ வாழ்வு தேடி - ஆயுதம் ஏந்த வேண்டியவர்களானார்கள்.

நீண்டதும், நெருக்கடிகள் நிறைந்ததும், பேரழிவுகளைத் தந்ததுமான இந்த ஆயுத வரலாற்றுப் போராட்டமும் தொடர்ச்சியான கொடும் யுத்தங்களையும், சொல்லொணாத் துயரங்களையும், கற்பனைக்கே எட்டாத நாசங்களையும் தமிழினத்துக்குத் தந்த நிலையில், அரச இராணுவ வல்லாதிக்கத்தினால் ஆயுதமுனையில் இப்போது அடக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய எழுச்சியினதும், கருத்தியல் சிந்தனையினதும் விளைவாக முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தைத் தனது இராணுவ மேலாதிக்கம் மூலம் கொழும்பு வெற்றி கொண்டிருக்கின்றது என்பது உண்மைதான்.

ஆனால், அதன் காரணமாக, தமிழ்த் தேசிய எழுச்சியும் அதனடிப்படையில் எழுந்த கருத்தியல் சிந்தனையும், தமது வாழ்க்கை முறை தொடர்பான தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளும் அடங்கிப்போய்விட்டன - அடக்கப்பட்டுவிட்டன - என்று அர்த்தமல்ல.

இந்த விடயங்களின் விளைவாகத் தோற்றம்பெற்ற ஆயுதப் போராட்டத்திலேயே - அடக்குமுறை ரீதியாக - கொழும்பு வென்றிருக்கின்றதே தவிர, தமிழினத்தின் ஆன்மாவைப் பற்றிப் பீடித்து நிற்கின்ற கௌரவ வாழ்வுக்கான அவர்களின் சிந்தனை - எண்ணம் - நோக்கம் - அபிலாஷை - அடக்கப்படவில்லை.

ஆனால், தனது இந்த இராணுவ வெற்றியை - அதிகார மேலாதிக்கத்தை நிலைநிறுத்திய 'சாதனையை' - வேறு விதமாக அர்த்தம் கொள்கின்றது கொழும்பு.

இந்த இராணுவ வெற்றி மூலம் தமிழர்களின் தேசிய எழுச்சி பற்றிய உணர்வு அடியோடு மழுங்கடிக்கப்பட்டு முறியடிக்கப்பட்டுவிட்டது. உரிமை, சுதந்திரம், நியாயமான அபிலாஷைகள் வேண்டித் தமிழினத்தின் எண்ணக் கருவில் தோன்றிய கருத்தியலை அடக்கி, ஒடுக்கி முறியடித்து, நசுக்கி விட்டோம் என்றே தென்னிலங்கை கருதுகின்றது; இறுமாப்புக் கொள்கிறது.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம். பல நூற்றாண்டுகளாக - ஏன் சரித்திர காலம் தொட்டே - தமிழர்களே அங்கு பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தனர்.

தமது தாயக மண்ணின் தனித்துவத்தைப் பேணுவதற்கான தமிழர்களின் சிரத்தை இன்று, நேற்று புதிதாக வெளிப்பட்ட ஒன்றல்ல. இலங்கைத் தீவு ஆங்கிலேய காலனித்துவப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, நாட்டின் ஆட்சி அதிகாரம், பெரும்பான்மையினர் என்ற முறையில் சிங்களவர்களிடம் சிக்கிக் கொண்ட காலம் தொட்டே, இந்தத் தாயகத் தனித்துவத்தைப் பாதுகாத்துப் பேணுவதற்காகத் தமிழர்களும் அவர்களின் தலைவர்களும் தளராது போராடியே வந்திருக்கின்றனர். இறுதியாக, இந்திய அழுத்தத்தின் பேரில் 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கொழும்பு அரசு கூட, வடக்கும், கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்ற கோட்பாட்டை அந்த ஒப்பந்த வாசகத்தின் முன்னுரையில் ஏற்று இணங்கியது.

ஆனால், ஆரம்பத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் நேரடியாகவும், இப்போது நீதிமன்ற நடைமுறை மற்றும் ஏற்பாடுகள் மூலம் சட்ட ரீதியாகவும் தமிழர் தாயகத்தை வடக்கு, கிழக்கு எனத் துண்டாடியுள்ளது கொழும்பு.

"இந்த வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற விவகாரம் காலாவதியான விடயம்; முடிந்துபோன கருத்தியல்; புலிகளுடன் சேர்ந்து அழிந்துபோன சித்தாந்தம். அதை மீண்டும் தோண்டி எடுத்து இங்கு அரசியல் நடத்த முடியாது" - என வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார் இலங்கையின் அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆக, புலிகள் இயக்கத்தின் சிதைவுடன், தமிழரின் தேசிய எழுச்சி தொடர்பான கருத்தியலும் சிதைந்து புதைக்கப்பட்டு விட்டதாகவே கொழும்பு கருதுகின்றது. அதைத்தான் நாட்டின் தலைவர் இப்படிப் பிரதிபலித்திருக்கின்றார்.

மிகத் தவறான கணிப்பீடு இது. அதனை வரலாறு உணர்த்தும் வேளை வராமல் போகாது.

# மீளக்குடியமர்ந்துள்ளோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு 'நிக்கொட்' நிறுவனம் உதவி

## விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.28

நலன்புரிமுகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ''நிக்கொட்'' நிறுவனம் பல்வேறு உதவிகளை வழங்கவுள்ளது.

''நிக்கொட்'' நிறுவனத்தின் உயர் அதிகாரியொருவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியிருந்து தற்போது மீண்டும் இங்கு குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கல்வி உட்பட அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவுள்ளோம். கல்வித்துறைசார் அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக விவரங்களைத் திரட்டவுள்ளோம்.

ஏனைய துறைசார் அபிவிருத்திக்கு ஒவ்வொரு பிரதேச செயலர் ஊடாகவும் விவரங்களைத் திரட்டவுள்ளோம்.

விவரங்கள் யாவும் முழுமையாகத் திரட்டப்பட்டவுடன் அடுத்த ஆண்டு முற்பகுதியில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும். அதற்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அபிவிருத்திப் பணிகளுக்காக ''நிக்கொட்'' நிறுவனம் பல மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது- என்றார். (50-9)

# பொன்சேகா வெற்றி பெற்றால் ஐ.நா. படை வருவது நிச்சயம்

## உடுவே தம்மாலோக்க தேரர் தெரிவிப்பு

ஐ.நா. சபையின் படையை இலங்கைக்குக் கொண்டு வருவதற் கான ஒரு சூழ்ச்சியாகத்தான் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஐக்கியதேசிய கட்சி பொது வேட்பாளராக ஏற்றுள்ளது - என்று அரசிற்கு ஆதரவு வழங்கி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக்க தேரர் குற்றம் சாட்டி யுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் பிற்பகல் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சகல பௌத்த குருமாரும் ஆதரிக்க வேண்டும். ஜே.வி.பியும் இந்த சர்வதேச சூழ்ச்சிகளுக்கு ஆளாகியுள்ளதா? ஐக்கியதேசிய கட்சியுடன் சேர்ந்து செயற்படுவதால் ஜே.வி.பி தன்னுடைய தன்மானத்தை இழந்து விட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொண்டதில் முதலாம் இடத்தில் இருப்பவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாம் இடத்தில் உள்ளவர் கோத்தபாய ராஜபக்ஷ. யுத்தம் சரத்பொன்சேகாவால் மாத்திரம் நடத்தப்பட்டதல்ல.

ஜனாதிபதி தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா வெற்றி பெற்றால் ஐக்கிய நாடுகள் சபையின் படை இலங்கைக்குக்கு வருவது நிச்சயம் - என்றார். (சி)

# இலவச கண் சிகிச்சை முகாம்

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள யாழ். மத்தி சத்திய சாயி சேவா நிலையத்தில் இந்த இலவச கண்சிகிச்சை முகாம் நடைபெறும். (50-224)

# யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பனை தென்னை வள மாநாடு

யாழ்ப்பாணம், நவ.28

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் ஆகியன இணைந்து நடத்தும் கூட்டுறவு பனைதென்னை வல்லுநர் மாநாடு எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பனம் தொழில் வல்லுநர் மாநாட்டில் பனைவளம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படுவதோடு பிரகடனங்களும் வெளியிடப்படவுள்ளன.

மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0212225072 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (50-16)

# இலங்கை வங்கி விரிவாக்கற் கிளைகளின் வங்கிச் சேவை இன்று ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கை வங்கியின் மானிப்பாய், சங்கானை விரிவாக்கற் கிளைகளின் வங்கிச் சேவைகள் இன்று சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வங்கிச் சேவையை ஆரம்பித்து வைப்பார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் கலந்துகொள்வார்.

அன்றையதினம் சங்கானை விரிவாக்கற்கிளை இலங்கை வங்கியின் நாடளாவிய கணனி வலைப்பின்னலுடன் இணைந்து கொள்ளவுள்ளது.

இந்தக் கிளைகளின் சேவைகள் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையும் நடைபெறவுள்ளன. (50-204-100)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 13 29.11.2009 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | துவாதசி பி.ப.04.52 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி பி.இ.04.13 வரை |
| சுபநேரம்: | 09.13-10.43 வரை |
| ராகுகாலம்: | 04.43-06.13 வரை |


# சேவை நயப்பு நிகழ்வு அச்சுவேலி மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம், நவ.28

கோப்பாய் கல்விக்கோட்ட அதிபர் சங்கம் நடத்தும் சேவை நயப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியில் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம்,சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் கா.தர்மரட்ணம், உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய அதிபர் இ.ஆனந்தராசா,சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை அதிபர் ச.நவரத்தினராஜவேல், கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை அதிபர் ச.லலீசன், கோப்பாய்க் கோட்ட முகாமைத்துவ உதவியாளர் பா.செந்தில்குமரன் ஆகியோருக்கு சேவை நயப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. (50-204-72)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலாயுதம் மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

தலைவர் - திரு. K.P.ஆனந்தநடேசன்.
இடம் - பாடசாலை மண்டபம்.
காலம் - நாளை (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி.

எமது பழைய மாணவர் சங்க யாப்புத்திருத்தம், அங்கீகாரம் என்பன பற்றி ஆராயப்பட இருப்பதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

பருத்தித்துறை. கி.குகநாதன், செயலாளர்.

(இ/562760)

## நான்காம் ஆண்டு நினைவுகள்



மலர்வு 10 * 07 * 1924 — உதிர்வு 11 * 12 * 2005

### அமரர் சுப்பையா செல்லத்துரை

திதி பூர்வபக்க ஏகாதசி

தஞ்சமென்று வந்தவர்க்கு தயவு காட்டி
தரணியிலே ஈடில்லாப் புகழீட்டி
இல்லற வாழ்க்கையில் நல்வழிகாட்டி
ஏற்றமுடன் நாம்வாழ வழிகாட்டி
நான்காண்டுகளை சோகச் சுமையாக்கி இறைவனடி சேர்ந்தீரே.
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்

சங்குவேலி தெற்கு, மானிப்பாய். குடும்பத்தினர். (92538)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### செல்வன் குகேஸ்வரன் லக்ஷன் (லச்சுக்குட்டி)



அன்னை மடியில் 14.10.2000 — இறைவன் அடியில் 29.10.2009

கடந்த 29.10.2009 அன்று சிவபதமடைந்த எமது அன்புச் செல்வனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (28.11.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.24, முஸ்லிம் ஆண் கல்லூரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

(அ/562759)

## ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் வீடு, காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் 4 பரப்புக் காணியுடன் 2300 சதுர அடி விஸ்தீரணம் உள்ள வீடு விற்பனை செய்யப்படவிருக்கிறது.

இன்று சனிக்கிழமை (28.11.2009) மு.ப. 11.30 மணிக்கு இந்த விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு 0776029164, 0775925386

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் வீதியில் 4 ¼ பரப்புக்காணியில் அமைந்துள்ள புதுவீடு விற்பனைக்குண்டு. (92546) தொடர்பு: 0717553524

## தவறிவிட்டது

30/1, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த சண்முகம் தேவராசா என்பவரது தே. அ. அ. (490823581V) யாழ். நகருக்குள் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு: 95, ஈச்சமோட்டை றோட், யாழ்ப்பாணம். தொ. பே. 0212227142

## தவறிவிட்டது

வெற்றிலைக்கேணி,முள்ளியான் எனும் முகவரியுடைய கனிஸ்ராமேரி பிரான்சிஸ் என்பவரின் தேசிய அ.அட்டை(837633753v), பல்கலைக்கழக அ.அட்டை HNB Cash line Card, கைத்தொலைபேசி மற்றும் சில ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் பருத்தித்துறை தனியார் பஸ்சில் 27.11.2009 காலை 7.20 அளவில் இருபாலைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:விலங்கியல்துறை, விஞ்ஞான பீடம், யாழ் பல்கலைக்கழகம்தொ.பே.021225925 — லூர்த்துமாதா வீதி, தும்பளை, பருத்தித்துறை.

## இப்படியும் நடக்கிறது

சண்டிலிப்பாய், நவ.28.

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஒருவர் அதற்குரிய பணத்தைச் செலுத்தாமல் வைத்தியசாலையிலிருந்து மாயமாக மறைந்துவிட்டாராம்.

இவர் குறித்து முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கி கையில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்குச் சென்ற ஒருவர் அங்கு கடமையாற்றிய வைத்தியரால் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

காயத்திற்கு சிகிச்சை பெற்ற அவர் பணத்தைக் கொடுக்காமல் எவருக்கும் தெரியாமல் அங்கிருந்து மறைந்து விட்டாராம்.

(ஒ-115)

## கண்காட்சியும் விற்பனையும்

''பெண்களின் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்போம்'' என்ற விற்பனையும் கண்காட்சியும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் இலங்கைப் பெண்கள் பணியகத்தினால் நடத்தப்படும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேசசெயலர் திருமதி சு.தெய்வேந்திரமும் சிறப்பு விருந்தினராக யாழ். உதவிப் பிரதேச செயலர் அஞ்சலி சாந்தசீலனும், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நவமணி ஜெயராசா ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-7)

## வேலையாள்கள் தேவை

★ கணக்காளர்
கணனி அறிவுள்ள, ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★ விற்பனையாளர்
★ உதவியாளர்
★ ஆங்கிலம் தெரிந்த இளைப்பாறியவர்கள்
ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் நேரில் வரவும்.

யாழ்.போன் சொப்
10, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

(அ/562756)

## மரண அறிவித்தல்கள்

### கிட்டினர் நவரத்தினம்

[ஓய்வு பெற்ற விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி]



வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிட மாகவும், இல 66/31,மூத்தவிநாயகர் வீதி,நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் குட்செற்வீதி, தோணிக்கல் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டினர் நவரத்தினம் கடந்த (22.11.2009) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கிட்டினர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகனும், தர்மினி(பிரதேசசெயலகம், வவுனியா),லோயினி(ஆசிரியை, விபுலானந்தா கல்லூரி, வவுனியா), பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரகுவின்(கனடா) அன்பு மாமனும், பரமேஸ்வரி, தவமணிதேவி, யோகராசா(பிரான்ஸ்), மற்றும் திரேஷா, நகுலாதேவி, புஸ்பராணி, பாலாநாயகி, ஜெயவதனா, மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரூபசிங்கம்,ஜெயராசா, கலாமணி(பிரான்ஸ்), தவராசா(ஓய்வுபெற்ற அதிபர், நீர்கொழும்பு), செல்வராசா(பிரான்ஸ்), சிவராசா(ஓய்வுபெற்ற தபால் அதிபர், கொழும்பு) யோகராசா (தொழில் உத்தியோகத்தர் கொழும்பு), துரைராசா (லண்டன்), சற்குணராசா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(29.11.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல,66/31, மூத்தவிநாயகர்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.இல-021 222 7210 (92550) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி குணபூசனி கமலநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியை, திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம்)



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணபூசனி கமலநாதன் (26.11. 2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், கமலநாதனின் அன்பு மனைவியும், கௌதமியின் (பிரான்ஸ்), பாசமிகு தாயும், சாமின் (பிரான்ஸ்) மாமியும், அழகராஜா (கோண்டாவில்), காலஞ்சென்றவர்களான அழகபூசனி -செல்லையா, குணராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிவழிபாடு வவுனியா தூய பரிசுத்தாவியானவரின்ஆலயத்தில் நாளை (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று நெலுக்குளம், கணேசபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்மடு வீதி, மரக்காரன்பளை, வவுனியா. 024-4920610 (92549) தகவல்: திருமதி கௌதமி சாம் (மகள்).

### தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (மணியம் மாஸ்ரர்)

[முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை Belvoir International School Colombo]



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (20.11.2009) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ரங்கூன் தம்பிப்பிள்ளை - மீனாட்சி அம்மாள் தம்பதியினரின் புதல்வரும் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் சிவசோதி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நடராசா, மார்க்கண்டு மற்றும் கந்தசாமி, இராமச்சந்திரன், வேலாயுதம், ஜானகி காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் மணிவண்ணன், ரமணன், ஜனார்த்தனன், மீராமைத்திரே ஆகியோரின் பாசமிகு தந்தையும் நளினி, மைதிலி, நிரஞ்சனி, மனோகரன் ஆகியோரின் அன்பு மாமனும் நிலோஷி, உமேஸ், ஊர்மி, சிந்துஜா, அனுஜா, ஹரிசன், லதூர்சன், விக்காஸ், அக்ஷயா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி. (92534) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து விடுபட்ட மாணவர்களுக்கான உதவிக் கொடுப்பனவு வழங்கும் வைபவம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், கல்வி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை, யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.இராசலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: அனு)*

# 'தேசத்தின் மகுடம்' கண்காட்சியில் யாழ். கூட்டுறவு அமைப்புகளும் பங்குபற்றும்

## ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பு

'தேசத்தின் மகுடம் 2010ஆம் ஆண்டுக்கான கண்காட்சி அடுத்த ஆண்டு பெப்ரவரியில் கண்டியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் யாழ். மாவட்டத்தின் கூட்டுறவு அமைப்புகளும் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்தார்.

சுன்னாகம் 'ஜசுபி' பழரசத் தொழிற்சாலை மற்றும் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்திச்சங்கம், சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பனை.தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் போன்றவை இக் கண்காட்சியில் கலந்து கொண்டு தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தவுள்ளன.

இக் கண்காட்சிக்குரிய உற்பத்திப் பொருள்களைத் தயார் செய்யுமாறு சம்பந்தப்பட்டோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று 2009 க்கான தேசத்தின் மகுடம் கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (50-224)

## இன்று மின் தடை

யாழ்ப்பாணம், நவ.28

அவசரதிருத்த வேலைகள் காரணமாக பின்வரும் இடங்களில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக் கும் என சுன்னாகம் மின்சாரசபையின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இணுவில், உடுவில், தாவடி , மருதனார் மடம், கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணப்பட்டணம், கோண்டாவில், கட்டுடை, சங்குவேலி, மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலே மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (50-9)

## யாழ். இந்து அதிபருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். இந்துக் கல்லூரி அதிபரான வீரபாகு கணேசராஜா, கல்வி நிர்வாக சேவைக்குப் பதவி உயர்வு பெற்றமையைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் பல்வேறு துறை சார் வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கி வரும் அதிபர் வீ.கணேசராஜாவுக்கான இந்தப் பாராட்டு விழாவினை கல்லூரியின் பழைய மாணவர் குழுமம் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (50-9)

## மனை முகாமைத்துவக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ.28

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய முறைசாராக் கல்விப்பிரிவின் மனை முகாமைத்துவக் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சிக் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வே.இராசகுமாரன், பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு. என்.அருள்நாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (50-204-236)

## மூத்த முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், நவ.28

முன்பள்ளி ஆசிரிய சேவையில் 25 வருட சேவையினைப் பூர்த்தி செய்த யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு விழாவும் சேவைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ். ஜே.செல்வராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி இராஜநாயகம் இராஜலக்சுமியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளின் செயலாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (50-9)

## இடம்பெயர்ந்த மாணவருக்கு இந்து மகளிர் கல்லூரி உதவி

யாழ்ப்பாணம்,நவ.28

வவுனியா நலன்புரி நிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டோரில் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 36 மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி கல்வி வசதி அளித்துள்ளதாக அதன் ஆசிரியர் நிலைய உதவி முகாமையாளர் இ.துஷ்யந்தன் உதயனுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பல்வேறு தேவைகளைக் கொண்ட மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 36 ஜி.சீ.ஈ சாதாரணதர மாணவர்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி கல்வி வசதியைச் செய்து கொடுத்துள்ளது.

அத்துடன் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சில உணவுப் பண்டங்களையும், கற்றல் உபகரணங்களையும் இந்து மகளிர் கல்லூரி வழங்கியுள்ளது - என்றார் அவர்.

(50-15)

## எச். என். பி.அஷ்ஷூரென்ஸின் விருது வழங்கும் நிகழ்வு

எச். என். பி. அஷ்ஷூரென்ஸ் நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் எச். என். பி. அஷ்ஷூரன்ஸ் நிறுவன யாழ். வலய முகாமையாளர் எஸ். எம். புவிராஜ் பிரதம விருந்தினராகவும் மேற்படி நிறுவனத்தின் உதவி முகாமையாளர் எம். சசிதரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

பிரதம விருந்தினர் பரிசில்களைத் திரைநீக்கம் செய்தல், அணித் தலைவர்கள் கௌரவிப்பு, விருதுகள் வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளன.

(50-201)

# வடக்கின் பொருளாதார, சமூக விழுமியங்களை எழுச்சிபெறச் செய்வதே எமது நோக்கம்

## யூனியன் வங்கிக் கிளை திறப்பு விழாவில் அதன் தலைவர் உரை

யாழ்ப்பாணம், நவ.28



முப்பது ஆண்டுகாலமாக நடைபெற்று வந்துள்ள உள்நாட்டுப் போரின் காரணமாகச் சீரழிந்து போயுள்ள வடக்கின் பொருளாதார சமூக விழுமியங்களை ஜனாதிபதியின் சிந்தனைகளுக் கேற்ற முறையில் எழுச்சி பெறச் செய்வதே எமது நோக்கம். இந்த அடிப்படையிலேயே யூனியன் வங்கியின் கிளையினை இங்குதிறந்து வைப்பதில் நாம் ஆர்வம் காட்டுகின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் யூனியன் வங்கியின் தலைவர் அஜித்த டி சில்வா. நேற்று யூனியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் அஜித்த டி சில்வா உரை நிகழ்த்தினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

எமது இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கு எமது சிறப்பு வங்கி வசதிகளைக் கொடுத்துதவ விரும்புகின்றோம். இந்த வசதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு மட்டுமன்றி, அதைச்சார்ந்த பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கும் கிடைப்பதாக இருக்கும். இது இப்பகுதியில் பொருளாதார சமூக மேம்பாட்டுக்கு உதவுவதாகவும் இருக்கும். பொதுச் சேவைகள் எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் சனிக்கிழமைகளிலும் வங்கிச் சேவைகளை வழங்கவிருக்கின்றோம். வடக்குக் கிழக்கில் எமது இருப்பினை உறுதி செய்யும் வகையில் மன்னார், வவுனியாவிலும் அடுத்த மாதம் கிளைகளைத் திறக்கவிருக்கின்றோம். அடுத்த வருடம் சுன்னாகத்திலும் கிளையைத் திறக்கவிருக்கின்றோம்- என்றார்.

இந்த நிகழ்வில், யூனியன் வங்கிப் பணிப்பாளர் அலெக்ஸி லொவல், வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், யூனியன் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் மற்றும் உத்தியோகத்தர்கள், மதத் தலைவர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-14-16)




## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ந[illegible]28

யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அ[illegible]கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் 40 வ[illegible] திற்கு மேற்பட்டவர்களுக்காக நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் லீக் முறை[illegible]ான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபெறும் அணிகளின் விவரம் வருமாறு:

* குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம். (பி.ப.3.45மணி)
* ஊரெழு [illegible]றாயல் விளையாட்டுக் கழகம் எதிர் பா[illegible]ர் சென்.அன்ரனிஸ் 'பி.' விளை யாட்டுக் கழகம். (மாலை.4.45மணி).

([illegible] 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யூனியன் வங்கியின் வட மாகாணத்தின் முதலாவது கிளை நேற்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப் பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யூனியன் வங்கியின் தலைவர் அஜித டி சொய்ஸா நாடாவை வெட்டி வங்கியைத் திறந்து வைப்பதையும், வங்கிப் பணிப்பாளர் அலெக்ஸி லோவல் மங்கள விளக் கேற்றுவதையும் முதல் இரண்டு படங்களில் காணலாம்.

வங்கித்தலைவர் அஜித டி சொய்ஸா, வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் உரைநிகழ்த்துவதை மூன்றாவது, நான்காவது படங்க ளிலும், வங்கியில் வாடிக்கையாளர் ஒருவர் தனது பணத்தை வைப்புச் செய்து கணக்கை ஆரம்பிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இரு படங்களிலும் காணலாம். *(படங்கள்: உமா, சுகந்தன்)*

# தமிழர்கள் எங்கிருந்தாலும் தனித்துவத்தை இழக்காது கல்வியில் மட்டுமல்ல அனைத்திலும் சாதனை படைப்பவர்கள்

## அதனைத் தொடர்ந்து நிரூபித்து வருகிறோம் என்கிறார் உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி மைதிலி



நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியாகியுள்ள 2009 ஆம் ஆண்டுக்குரிய ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று தமிழ் சமூகத்திற்குப் பெருமை தேடிக்கொடுத்துள்ள கொழும்பு சைவமங்கையர் கழக வித்தியாலய மாணவி மைதிலி சிவபாதசுந்தரம் யாழ்ப்பாணம், கோண்டாவில் நாகபூசணிஅம்மன்கோயில டியைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

தற்போது கொழும்பில் வசித்துவருகிறார். அவரது சாதனை பற்றி "உதயனு"க்கு அவர் கூறிய கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம். எம்மவர்கள் எத்திசையில் இருந்து சாதனை படைத்தாலும் 'உதயன்' அவர்களின் வெற்றியை பறைசாற்றுவான்.

யாழ்ப்பாணம், கோண்டாவில் நாகபூஷணி அம்மன் கோயிலடியைச் சொந்த இடமாகக் கொண்ட நான் எனது ஆரம்பக் கல்வியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கற்றேன்.

பின்னர் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து கொழும்பில் வசித்து வருகிறேன். தரம் 2 முதல் 13 வரை கொழும்பு சைவமங்கையர் வித்தியலயத்தில் கற்று வந்தேன்.

எனது அப்பா பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் இலத்திரனியல் பொறியியலாளராக இருந்து ஓய்வு பெற்றவர்.

அம்மா பல்வைத்தியராகக் கடமையாற்றுகிறார். அக்கா வைத்தியராகவும், அண்ணா பொறியியலாளராகவும் கடமையாற்றுகின்றார்கள்.

நான்தான் வீட்டில் கடைசிப்பிள்ளை. என்னுடைய உயர் பெறுபேறுக்கு எனது குடும்பத்தினர் மிகுந்த அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டிருந்தனர்.

உயர்தரப் பரீட்சை எழுதி முடிந்ததும் 3ஏ பெறுபேறு வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. அவ்வாறு எதிர்பாராது கிடைத்த இந்த சந்தோசத்திற்கு எல்லையே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இருப்பினும் எனது சிறுகவலை என்னவென்றால் எனது பிறந்த இடமான கோண்டாவிலில் இருந்து இத்தகைய சாதனையைப் படைக்கவில்லை என்பதே. இருப்பினும் என்னைப் பெற்றெடுத்த எனது சொந்த ஊருக்கு என்றும் விசுவாசமாக இருப்பேன்.

யாழ்ப்பாணக் கலாசாரமும் கொழும்புக் கலாசாரமும் வேறுபாடுகளைக் கொண்டது. இருப்பினும் கொழும்புக் கலாசாரத்திற்குள் சிக்கிவிடாது நிதானமாகக் கட்டுக்கோப்புடன் படிக்க வேண்டும் என்று எனது குடும்பத்தினர் அடிக்கடி அறிவுரைகளைச் கூறுவார்கள்.

அத்துடன் நான் படித்த சைவ மங்கையர் கழக வித்தியாலயமும் எமது சைவப்பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் சூழலையும் கொண்டது. ஆதலால் எது வந்துபோதும் தனித்துவத்தோடு கல்விகற்க முடிந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது வெற்றிக்கு உந்துதலாக இருந்த எனது பாடசாலை ஆசிரியர் சமூகத்திற்கு 'உதயன்' ஊடாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது இத்தகைய சாதனையின் மகிழ்ச்சியை எனது யாழ். மண்ணில் இருக்கும் தமிழ் உறவுகளுடனும் குறிப்பாக மாணவ சமூகத்துடனும் இணைந்து அன்போடு பகிர்ந்து கொள்கிறேன்.

தமிழர்கள் எங்கிருந்தாலும், தமது தனித்துவத்தை இழக்காது கல்வித்துறையில் மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் சாதனைகளைப் படைக்க வேண்டும். இதுவே எனது மனதில் பதிந்துள்ள ஆழமான ஆசை. நான் இன்னும் கல்வித்துறையில் சாதனை படைக்க வேண்டும் என்ற இலக்குடன் எனது கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வேன்.

எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள என் உறவுகளுக்கு என்னாலான சேவைகளையாற்ற விரும்புகிறேன். நான் வைத்தியராகி நிச்சயமாக நாட்டை விட்டு வேறு எங்கும் செல்லமாட்டேன். எனது மண்ணில் இருந்து சேவையாற்றுவேன். எனது

**செவ்வி:- கவிநேசன்**

இத்தகைய மகிழ்ச்சியை எனது சொந்த ஊரில் உள்ள உறவுகளுடனும் சக மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ள டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம் வருவேன்.

அவ்வாறு யாழ்ப்பாணம் வரும்போது எனது ஆரம்பக் கல்விக்கு வித்திட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்து அவர்களின் ஆசியைப் பெற்றுச் செல்வேன்.

கொழும்பிலிருந்து நான் பெற்றிருக்கும் இந்த சாதனையின் மகிழ்ச்சியை எனது யாழ் உறவினர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு இச் சந்தர்ப்பத்தை வழங்கிய உதயனுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார்.

**ஜேர்மன் மொழி**
German Language Exam - ! தமிழ் விளக்கத்துடன் ஜேர்மன் மொழியை கற்பிக்கப்படும் வகுப்பு ஆரம்பம் 01.12.2009 இடம்: Micro System Development Centre, Jaffna Road, Manipay M.P.Mahendirarajah,German Teacher, T.P. 0774303107

**காயத்திரி பப்ளிகேஷனின்**
**பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு**
யாழ்.அன்னை புத்தகசாலை அனுசரணையில்
**மாபெரும் புத்தகப் பெருவிழா**
நாளை ஞாயிறு முதல் டிசம்பர் 1 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.
எமது வெளியீடுகளை 1000/= க்கு கொள்வனவு செய்தால் 2010 வர்ணக் கலண்டர் இலவசம்
காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை
சிறுவர் நூல்கள், புலமைப் பரிசில் நூல்கள், பொது நூல்கள், பயிற்சி நூல்கள், கணனி நூல்கள், பாடசாலை உபகரணங்கள், இலக்கிய நூல்கள் மலிவு விலையில்.......
பாடசாலை மாணவர்களுக்கு, நூலகங்களுக்கு விசேட விலைக்கழிவு
காயத்திரி பப்ளிகேஷன் - கொழும்பு
011 4981906, 0727374750
(சி/562750)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
அதி உயர் ரக, சிறிய இன லைன் பொமேரியன் நாய்க்குட்டிகளும், டோமன் பெண்குட்டியும் ஒறிஜினல் ஜேர்மன் செப்பேட் ஆண் குட்டியும் (6 மாதம் நிரம்பியது) விற்பனைக்குண்டு. சகல தடுப்பூசிகளும் போடப்பட்டு பூச்சி நீக்கப்பட்டுள்ளது. புத்தகம் உண்டு. தொடர்பு: V.S சற்குணன்
52, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்.
T.P 021 222 7535 (92544)

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு.சு.விஜயகாந் அவர்களுக்கு யாழ் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அவசரமாக வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. கச்சேரி, நல்லூர் வீதி, கோவில் வீதி, இராசாவின் தோட்டம் அண்மித்த பகுதியில் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: R. தீசன்
(92537) 0772487533

**ஸ்டோர் வாடகைக்கு உண்டு**
கொக்குவில், பிறவுண் வீதியில் பாரிய பார ஊர்திகள் சென்று வரக்கூடிய வசதியுடன் கூடிய ஸ்டோர் வாடகைக்கு உண்டு. விஸ்தீரணம் சுமார் 4000 சதுர அடி.
தொலைபேசி: 0771611815

**CHUNDIKULI GIRLS' COLLAGE, JAFFNA.**
**WANTED**
B BA or BCom graduate with a good knowledge of English to teach G. C. E(A/L) English medium classes.
Applications close 7th December 2009.
Only shortlisted candidates will be considered for an interview.
**Principal.**
(சி/562741)

**கண்ணீர் அஞ்சலி**



எமது ஆருயிர் நண்பன் ம.நிமலன் அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் இராசையா மகேஸ்வரன்**
அவர்கள் அகாலமரணம் அடைந்த செய்திகேட்டு மிகுந்த மனவேதனை அடைகிறோம். அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
2003 A/L கணிதப் பிரிவு பழைய மாணவர்கள்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
(92535)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவோ ரணிலோ எனக்கு சவாலாக முடியாது!

## ஜனாதிபதி மஹிந்த சொல்கிறார்

கொழும்பு, நவ. 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பொது வேட்பாளர்களான முன்னாள் இராணுவத் தளபதியோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவோ தனக்குச் சவாலாக விளங்கப்போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பொதுவேட்பாளரான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவோ எனக்கு சவாலாக விளங்கப் போவதில்லை.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் சீருடையுடன் இருக்கும் இராணுவ அதிகாரிகள் அல்லர்.

பாதுகாப்புச் செயலாளர் எப்போதோ ஓய்வு பெற்றுவிட்டார். அவர் தற்போது இராணுவச் சீருடையில் இல்லை. சாதாரண உடையில் இருக்கிறார்.

வேட்பாளர்கள் அவதூறுப் பிரசாரத்தைத் தவிர்த்து சாதகமான பிரசார நடவடிக்கையை முன்னெடுப்பது இன்றைய தருணத்தின் தேவையாகும்.

தேர்தலை நடத்தக் கோருவதற்கு மக்களுக்கு உள்ள உரிமையை நான் மதிக்கிறேன்.

இதன் காரணமாகவே எனது ஆட்சிக் காலத்தின் இரண்டு வருடங்களைத் தியாகம் செய்தேன். மக்களின் குரல்களை செவிமடுத்தேன்.

2005 இல் எதிர்க்கட்சிகள் நான் வட பகுதி மக்களின் ஆதரவு இல்லாமலேயே வெற்றிபெற்றேன் என்ற கருத்தொன்றை உருவாக்கின.

இதன் காரணமாக ஜனாதிபதியைத் தீர்மானிப்பதில் வடக்கு - கிழக்கு மக்கள் முக்கியம் பெறவேண்டும் என நான் கருதினேன். தற்போது அவர்கள் தமது தலைவரைத் தெரிவு செய்யலாம்.

நாட்டை ஐக்கியப் படுத்துவேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்றினேன். அதனை நிறைவேற்றியதற்கான பெருமையையும் நானே எடுத்துக்கொண்டேன். முப்படைத் தளபதிகள், படையினர் மற்றும் நாட்டு மக்கள் எனது பின்னால் அணிவகுத்தனர்.

யுத்தத்தை வெல்வதற்கான பலத்தை எனது தலைமைத்துவத்துக்கு அளித்த பெருமை அவர்களுக்கே செல்ல வேண்டும்.

எதிர்காலத்தில் நாடாளுமன்ற முறைமையைப் பலப்படுத்த வேண்டும். நாடு அபிவிருத்தியை நோக்கி முன்னேற வேண்டும். இதன்போது சவால்களைச் சந்திக்க வேண்டும்.

எனது நாற் பது வருடகால அரசியல் வாழ்க்கை இரத்தக்கறையோ அல்லது சேற்றுக் கறையோ அற்றது.

தேர்தலின் போது ஊடகங்கள் சுதந்திரமாகவும் நேர் மையாகவும் செயற்படுவது அவசியம்.



எனது பதவிக்காலத்தின் போது ஊடகங்கள் துன்புறுத்தப்பட்டமைக்கான முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். வேறு யார் மீதும் நான் இதற்கான குற்றச்சாட்டைச் சுமத்தவில்லை. மாறாக இது குறித்த ஒழுங்குமுறையிலான விசாரணையை மேற்கொண்டேன்.

## செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.28

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புண்ணிய கிராம வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் ஒருநாள் நற்பண்புச் செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் தெல்லிப்பழை அண்ணமார் அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் கலந்துகொள்வார். பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் பயன்தரும் மரங்கள் நடும் நிகழ்வும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து ''ஒற்றுமையே உயர்வு'' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மாவும் ''இந்துசமய இறைமைகள்'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசனும், ''நெருக்கீடுகளும் அதற்கான தீர்வும்'' என்னும் தலைப்பில் சைவப் புலவர் ந.நவராஜும் ''சைவசமய வாழ்வின் முக்கியத்துவம்'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரனும் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (50-201)

# பொன்சேகாவின் உரிமை மீறல் மனு டிசெம்பர் 2 ஆம் திகதி பரிசீலனைக்கு

கொழும்பு, நவ. 28

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு அடுத்த மாதம் 2 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் தமக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தே சரத் பொன்சேகா இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

மேலும் இந்த மனுவில் -

நான் அரசியலில் பிரவேசித்துள்ளதால் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்காக பல்வேறு இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது. எனவே கடும் பாதுகாப்பு அவசியம்.

600 படையினரையும் 10 வாகனங்களையும் இரண்டு குண்டு துளைக்காத வாகனங்களையும் எனது பாதுகாப்புக்குப் பெற்றுத் தரவேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக மூன்று வருடங்களும் ஏழு மாதங்களும் இராணுவத் தளபதியாக இருந்து யுத்தம் புரிந்ததால் அந்த இயக்கத்திடமிருந்து எனக்கு அச்சுறுத்தல் இருக்கிறது.

எனது பாதுகாப்பிற்காக 62 படையினரும் மூன்று வாகனங்களும் மாத்திரமே தற்போது வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் கடற்படைத் தளபதி டபிள்யூ. கே.ஜே.கரன்னாகொடவிற்கு 120 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் 11 வாகனங்களும் குண்டு துளைக்காத வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் முப்படைகளினதும் தளபதிகளுக்கு காணி வழங்கப்பட்டபோதிலும் மனுதாரருக்கு வழங்கப்பட்ட காணிக்கான உறுதி இன்னும் வழங்கப்படவில்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க எந்த ஜனாதிபதியாலும் முடியாது

## ஊடகத்துறை அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, நவ. 28

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஆட்சிக்கு வரும் எந்த ஜனாதிபதியாலும் இல்லாதொழிக்க முடியாது என்று அரசு தெரிவித்தது.

அவ்வாறு ஒழிப்பதாக விருந்தால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்று சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று அரசு கூறியது.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தி நாடாளுமன்றத்தை ஸ்திரமாக்கிவிட்டே நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை அரசு இல்லாது செய்யும் என்று அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதில் அதிக விருப்பம் கொண்டிருப்பவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான். ஆனால், அவரால் மாத்திரமல்ல ஆட்சிக்கு வரும் எந்த ஜனாதிபதியாலும் இந்த முறைமையை இல்லாதொழிக்க முடியாது.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்று பிறகு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியே இந்த ஜனாதிபதி முறைமையை இல்லாது செய்யமுடியும்.

அரசியல் இலாபத்துக்காக எதிர்க்கட்சிகள் இந்த ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்குமாறு கேட்கின்றன. எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி நாட்டை நாம் சீரழிக்க மாட்டோம்'' - என்றார். (சி)

## அதிபர் வட்டத்தின் ஏழாவது தரவட்ட அமர்வு நிகழ்வு

வண்ணை, நவ.28

கல்வியில் மெய்மை நோக்கிய அதிபர் வட்டத்தின் ஏழாவது தரவட்ட அமர்வு நிகழ்வு அடுத்த மாதம் 2ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை யின் பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி எல்.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வளவுரையை யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி.வேல்நம்பியும், அனுபவப் பகிர்வை ஆனைப்பந்தி மெ.மி.த.க பாடசாலை அதிபர் மு.முரளிதரனும் நிகழ்த்தவுள்ளனர். (50-204-160)

# இலங்கையை இராணுவ மயப்படுத்தியது ஜனாதிபதி மஹிந்தவே என்கிறார் மங்கள

கொழும்பு, நவ. 28

ஜெனரல் சரத் பொன்சேகா அதிகாரத்திற்கு வந்தால் முழு நாடும் இராணுவ ஆட்சிக்கு உட்படுத்தப்படும் என ஜனாதிபதியும், அவரது ஊடகப் பரிவாரங்களும் பிரசாரம் செய்துவருகின்ற போதிலும், கடந்த நான்கு வருடங்களாக இந்த நாட்டின் நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்தியது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே மங்களசமரவீர இத னைத் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபஷவால் அரச நிர்வாக பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட இராணுவ மற்றும் பொலிஸ் துறை அதிகாரிகள் 25 பேரின் பெயர்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

1. வடமாகாண ஆளுநர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி.

2. கிழக்கு மாகாண ஆளுநர், ஓய்வுபெற்ற ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம.

3. பாதுகாப்புச் செயலாளர், ஓய்வு பெற்ற லெப்டினன்ட் கேணல் கோத்தபாய ராஜபக்ஷ.

4. பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட.

5. பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர், எயார் வைஷ் மார்ஷல் ரவி அருந்தவநாதன்.

6. கிழக்கின் உதயம், வடக்கின் வசந்தம் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர், முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ என அந்த 26 அதிகாரிகளின் பெயர் விவரத்தையும் அவர் அங்கு கூறினார். (சி)



வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்திய முன்பள்ளி ஆசிரியர்களின் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபையின் முகாமைத்துவ பிரதம உதவியாளர் திருமதி நளாயினி பரமநாதன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எம்.எக்ஸ்.சர்வானந்தன் உரையாற்றுவதையும், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவியாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆசிரியை ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகிலுள்ள இரண்டு படங்களில் காணலாம்.

(படங்கள்: நவாலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதி மாதிரி வினாத்தாள்கள் - தொகுதி I

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## கணிதம் - I (புதிய பாடத்திட்டம்) 32-T-I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.


### பகுதி - A

01. சுருக்குக. (-8) - (-2)

02. 3/5 கிலோமீற்றரை மீற்றரில் தருக.

03. தீர்க்குக. 5/p = 1

04. எண்கோட்டில் வகை குறிக்கப்பட்ட சமனிலியைத் தருக.




05. பெறுமானம் காண்க. $\sqrt{16 + 6}$


06. 52km/h எனும் கதியில் செல்லும் வாகனம் 13km தூரம் செல்ல எடுக்கும் நேரம் எவ்வளவு?

07. A = {x : 10 ≤ x ≤ 20, x {முக்கோண எண் } தொடை A ஐ மூலகங்களுடன் தருக.

08. $y = 4-5x^2$ எனும் வளையின் சமச்சீா் அச்சின் சமன்பாட்டைத் தருக.

09. ரூபா 100இற்கு 1மாத வட்டி வீதம் 2% எனில், வருட வட்டி வீதம் எவ்வளவு?


10. P என்னும் நிறை எண்ணை கிட்டிய 10இற்கு மட்டந்தட்டியபோது பெறப்பட்ட பெறுமானம் 50 எனில், P எடுக்கக்கூடிய அதிகூடிய பெறுமானம் யாது?

11. 


AC = BC 10cm, AB = 12cm $B\hat{A}C = \theta$ எனில், Sin θ இன் பெறுமானத்தைக் காண்க.

12. சுருக்குக. $x^4 + x^2 / x^2 + x^0$

13. உருவில் O வட்டத்தின் மையம் ABCD ஒரு நேர்கோடு AB = BC = CD = EF, BE = 13cm CE = 5cm எனில், ADEFஇன் பரப்பளவு யாது?





14. QR இன் நீளம் யாது?




15. a = 1/3, b = (-2), c = (-3) எனின், bc + 1/aஇன் பெறுமதியைக் காண்க.

16. 1:3500 எனும் அளவிடையில் வரையப்பட்ட காணி ஒன்றின் அளவிடைப்பரப்பளவு $2cm^2$ எனின், உண்மைப் பரப்பளவை $m^2$ யாது?


17. O வட்டத்தின் மையம் AEB, ADC, BOC என்பன நேர்கோடுகள் $E\hat{O}D = 62^0$ எனின், $E\hat{A}D$இன் பருமனைக் காண்க.





18. (6x - 18), (2x + 3), x .......... என்பது கூட்டல் விருத்தியிலுள்ள அடுத்துவரும் மூன்று உறுப்புகளாகும். x இன் பெறுமானத்தைக் காண்பதன் மூலம் முதலாம் உறுப்பை எழுதுக.

19. காரணிப்படுத்துக. $41/6m^2 - n^2/24$


20. உருவில் தரப்பட்ட தரவுகளுக்கு அமைய x இன் பெறுமானம் யாது?




21. இரண்டு வட்டங்கள் வெளிப்புறமாக E இல் தொடுகின்றன. நாற்பக்கல் ABCD இன் பக்கங்கள் படத்தில் காட்டியவாறு வட்டத்தைத் தொடுகின்றன. BE = ED = 5cm AB = BC = 12cm எனின், நாற்பக்கல் ABCDஇன் சுற்றளவைக் காண்க.




22. உருவில் ACF, EDF, BCD என்பன நேர்கோடுகள் AB = 8cm எனின், EFஇன் நீளத்தைக் காண்க.





23. 18% பங்குலாபம் தரும் ரூபா 25 பங்குகளை வைத்திருக்கும் ஒருவன் வருட வருமானமாக ரூபா 900 பெறுகிறான். அவனிடமுள்ள பங்குகள் எத்தனை?

24. 1/a - 1/b = 1/b - 1/cஇல் bஐ எழுவாயாக்குக.

25. x = 1/2, x = -2 எனும் மூலங்களை உடைய இருபடிச் சமன்பாட்டை $ax^2 + bx + C = O$ எனும் வடிவில் தருக. இங்கு a, b, c என்பன நிறை எண்கள்.

26. x இன் பெறுமானம் யாது?




27. பொ.ம.சி. காண்க (p-2), $(4-p^2)$

28. தீர்க்குக. 21gx - lg9 = 2-lg4

29. 4, x, 8, 2x, 10 எனும் எண்களின் இடை x+4 எனின், xஇன் பெறுமானத்தைக் காண்க.


30. AB = 6cm, $A\hat{C}B = 90^0$ ஆக அமையுமாறு புள்ளி Cஇன் ஒழுக்கை பரும்படி படம் மூலம் விளக்குக.

A 6cm B

### பகுதி - B


01. கண்ணன் 1kg கத்தரிக்காய் ரூபா 50படி 48kg கத்தரிக்காய்களை வாங்கினான்.
    1) கண்ணன் 48kg கத்தரிக்காய்களையும் வாங்கிய விலை எவ்வளவு?
    2) கண்ணன் 48kg கத்தரிக்காய்களையும் 1kg ரூபா 60படி விற்றால் அடையும் இலாபம் யாது?
    3) இதன் மூலம் அவர் அடையும் இலாப சதவீதம் எவ்வளவு?
    4) கண்ணன் 3/8 பங்கு கத்தரிக்காய்களை ரூபா 60படி விற்ற பின்னர் அதிலேற்பட்ட பழுது காரணமாக மீதியை ரூபா 50படி விற்கிறான் எனின், அவன் 48kg கத்தரிக்காய்களையும் விற்றுப்பெற்ற பணம் எவ்வளவு?
    5) வினா 02இன்படி விற்றதைக்காட்டிலும் வினா 04இன்படி விற்பதன் மூலம் அவனிற்கு எவ்வளவு இலாபம் குறைவடையும்?
    6) கண்ணன் 10% இலாபம் அடைய வேண்டும் எனின், 1kg கத்தரிக்காய்களை என்ன விலைக்கு விற்க வேண்டும்?

02. ABCE ஒரு செவ்வகம் CDF ஓர் அரைவட்டம் AF = EF = BG = CG, AB = 21cm, AE = 12cm, FG = 5cm எனின்,
    1) முக்கோணி AEFஇன் பரப்பளவு யாது?
    2) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
    3) AFஇன் நீளம் யாது?
    4) நிழற்றிய பகுதியின் சுற்றளவு யாது?





03. a) மாணவர்கள் சிலர் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் அருகில் வலையுரு வரையத்தில் காட்டப்பட்டுள்ளன.
    1. இங்கு காட்டப்பட்ட மாணவர்களது மொத்த எண்ணிக்கை யாது?
    2. இவ்வலையுரு வரையத்திலிருந்து ஒரு மீடிறன் பல்கோணி வரைக.

    b) மாணவர்கள் கணிதபாட கணிப்பீடு ஒன்றில் பெற்ற புள்ளிகள் வருமாறு:
    12, 16, 18, 10, 17, 18, 19, 13, 15, 14, 8
    1. ஆகாரப்புள்ளி யாது?
    2. இடையம் யாது?
    3. காலணை இடைவீச்சு யாது?




04. தரம் 12 வகுப்பிலுள்ள 40 மாணவர்களிடம் அவர்கள் தரம் 11 இல் கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் பெற்ற பெறுபேறுகள் வினாவப்பட்டு அதன் ஒரு பகுதி அருகில் வென்னுருவில் காட்டப்பட்டுள்ளது.




T - தமிழ் பாடத்தில் A சித்தி பெற்றோர்.
M - கணித பாடத்தில் A சித்தி பெற்றோர்.
S - விஞ்ஞான பாடத்தில் A சித்தி பெற்றோர்.
    1) நிழற்றப்பட்ட பிரதேசத்தை சொற்களில் விவரிக்குக.
    2) நிழற்றிய பிரதேசத்திற்குரிய மாணவர்களின் எண்ணிக்கை 7 எனில், கணித பாடத்தில் A சித்தி பெற்றோர் எத்தனை பேர்?
    3) விஞ்ஞான பாடத்தில் A சித்தி பெற்றோர் 15 பேர் எனின், இரண்டு பாடங்களில் மட்டும் A சித்திபெற்றோர் எத்தனை பேர்?
    4) n (T∪S)' ஐ தருக.
    5) (M'nT)nsஇற்குரிய பிரதேசத்தை நிழற்றுக.
    6) இவர்களில் ஒருவரை எழுமாறாக தெரிவுசெய்தால் அவர் தமிழ் பாடத்தில் மட்டும் A சித்தி பெற்றவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

05. பாடசாலை ஒன்றில் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 80% மாணவர்கள் சித்தியடைந்தனர். சித்தியடைந்த மாணவர்களில் விஞ்ஞான பிரிவையும், வர்த்தகப் பிரிவையும் தெரிவுசெய்தோருக்கான விகிதம் 1:3 ஆகவும், வர்த்தகப் பிரிவினையும் கலைப் பிரிவினையும் தெரிவுசெய்தோருக்கு இடையிலான விகிதம் 2:3 ஆகவும் காணப்பட்டது.
    1) விஞ்ஞான பிரிவு, வர்த்தகப் பிரிவு, கலைப்பிரிவு ஆகியவற்றைத் தெரிவுசெய்தோருக்கு இடையிலான விகிதத்தை எளிய வடிவில் தருக.
    2) விஞ்ஞான பிரிவை தெரிவுசெய்தோர் 24 பேர் எனில், கலைப்பிரிவை தெரிவு செய்தோர் எத்தனை பேர்?
    3) எத்தனை மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தனர்?
    4) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் எத்தனை பேர்?
    5) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 3/5 பங்கினர் புலமைப்பரிசில் பணம் பெறுபவர்கள் எனின், அவர்களின் எண்ணிக்கை யாது?

13ஆம் பக்கம் பார்க்குக.....

இன்றைய கணித பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கான அனுசரனை வழங்குபவர்கள்
NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
Tell no:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



2009 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவர்களுடன் வித்தியாலய அதிபர் எஸ்.இராகவன், வகுப்பாசிரியர்கள் திருமதி சுமதி மகேஸ்வரன், செல்வி ஆனந்த நாயகி கந்தப்பு ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

[படம் : சுந்தா]



காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நாடக ஆற்றுகை நிகழ்த்து கின்றபோது எடுக்கப்பட்ட படம். [50-20]




வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற வாணிவிழாவின் போது மேடையேற்றப்பட்ட 'முப்பெருந்தேவியர்' நாடகத்தின் ஒரு காட்சியை இங்கு காணலாம்.

[படம் : நந்தன்]



"சொண்ட்" நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர் தினவிழா நல்லூர் காந்திஜி சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நல்லூர் உதவிப்பிரதேச செயலர் ஏ. சோதிநாதன் உரை ஆற்றுவதையும், ஆங்கில ஆசிரியை செல்வி எஸ்.ராஜகுமாரி சிறுவன் ஒருவனுக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். [50]



'சொண்ட்' நிறுவனத்தால் நுணாவில் மேற்குப் பகுதியில் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

புனரமைக்கப்பட்ட குளத்தினை ஜே/308 கிராம உத்தியோகத்தர், சமாதான நீதிவான் சு. பூபாலசிங்கம், விவசாய சம்மேளனத் தலைவர், சொண்ட் நிறுவனப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம். [50]




வலி. கிழக்குப்பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் அச்சுவேலி வலய மாண வர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அச்சுவேலி சமுர்த்தி வங்கி மண்ட பத்தில் வலி. கிழக்கு சமுர்த்தி வங்கிப் பணிப்பாளர் திருமதி சுகந்தி குணசீலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் உரையாற்றுவதையும் ஈழ மக்கள் ஜனநாயக முன்னணியின் அச்சுவேலி அமைப்பாளர் எம். தர்மராஜா மற்றும் வண பிதா நியூட்டன் ஆகியோர் அமர்ந்திருப்பதை யும் படத்தில் காணலாம். [11]



மட்டுவில் கமலாசனி வித்தியாலய தமிழ்த்தினவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட தென்ம ராட்சிக் கல்வி வலய பதவிநிலை அலுவலர் பொன். தர்மேந்திரன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதன் மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம். [50-207]



சாவகச்சேரி பிரதேசசபையின் ஏற்பாட்டில் கச்சாய் பொது நூலகத்தில் தேசிய வாசிப்புமாத இறுதிநாள் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வாசிப்பு முகாம் போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் த.கந்தையா பரிசில் வழங்குவதைக் காணலாம். [50]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





- கவிநேசன்

வாரத்தின் முதல்நாள் திங்கட்கிழமை என்றால் அரச அலுவலகங்களில் சனக் கூட்டத்திற்கு பஞ்சமில்லை! ஏனெனில் அன்றாவது அதிகாரிகளைச் சந்திக்கலாம் என்ற நம்பிக்கை. அந்த அலுவலகம் ஒரு கல்வித்துறை சார்ந்தது. ஆதலால் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தேவைக்குரியவர்கள் அங்குள்ள உயர் அதிகாரியொருவரைச் சந்திப்பதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்தார்கள்.

அந்த அதிகாரியின் அலுவலக வாயிலில் 'Out' (அவுட்) 'போர்ட்' போடப்பட்டிருந்தது.

நீண்ட நேரத்துக்குப் பின் அந்த அதிகாரி கதவினை மெதுவாகத் திறந்து உள்ளே இருந்து வெளியே வந்தார்.

அந்த அலுவலகத்தில் இவ்வாறான சம்பவம் சில நாள்களாக அல்ல பல நாள்களாக நடக்கிறது. பார்த்தீர்களா? சம்பவத்தைக் கேட்டீர்களா? அரச அதிகாரிகளின் அசண்டையீனம் என்பது பல அலுவலகங்களில் பல விதமாக நடந்துகொண்டிருக்கிறது.

சில அதிகாரிகள் கடமை நேரம் தமது அலுவலகத்திற்குச் செல்லாமல் பொது மக்களை அலைக்கழிக்கிறார்கள்.

# உள்ளே வெளியே




''என்ன தம்பி எப்ப சேர் வருவார்''

'வெளியில போயிட்டார் வந்திடுவார் உங்களுக்கு அவசரம் என்றால் போய் நாளைக்கு வாங்கோ' என்று எரிஞ்சு விழுந்தார் அந்த அதிகாரியின் 'பீயோன்'.

'இல்லைத் தம்பி இண்டைக்கு அவசரமாய் இந்த ''போமில சைன்'' வேண்டவேணும்' என்று அந்தப் பெண்மணி தனது தேவையைப் பரிதாபமாய் ஒப்புவித்தாள்.

'உங்கட அவசரத்துக்காக நான் என்ன செய்யிறது ''சேர்'' வெளியில போட்டார். ''போட்'' அதுக்குத்தானே போட்டுக்கிடக்குது உங்கட கண்ணுக்குத் தெரியேலையா?' அதிகாரத் தொனியில் மீண்டும் கடிந்து கொண்டார்.

நீண்ட நேரமாக பொதுமக்கள் காத்திருக்கிறார்கள் கதிரை அதிகாரியின் வருகையை எதிர்பார்த்து. அந்த அதிகாரியின் அலுவலக வாயிலில் 'Out' போர்ட் தொங்கிக்கொண்டிருந்தது.

சிலர் அலுவலகத்துக்கு உள்ளே இருந்தவாறு பொதுமக்களை அலைக்கழிக்கிறார்கள். அரச அதிகாரிகள் பொதுமக்களுக்கு வெறுப்புடன் சேவையாற்றக் கூடாது. பொறுப்புடன் சேவையாற்ற வேண்டும்.

படித்த சமூகத்தைச் சேர்ந்த அரச அதிகாரிகள் பொறுப்பாக சேவையாற்றத் தவறுவதால் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகிறார்கள்.

அரச அதிகாரிகள் சிலர் பொறுப்புணர்ந்து தன்னலமற்ற சேவையினைப் பொதுமக்களுக்கு வழங்குகிறார்கள். அதை நாம் மறந்துவிடவோ? மறைத்துவிடவோ? நினைக்கவில்லை. அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

ஆனால் பொறுப்பற்ற முறையில் மக்களுக்கு வெறுப்பூட்டும் செயல்களைப் புரிகின்ற அதிகாரிகள் திருந்த வேண்டும். திருந்துவார்களா? பொதுமக்களுக்குச் செம்மையாகச் சேவை செய்ய முன்வருவார்களா? பொறுப்பற்ற முறையில் சேவைபுரியும் அதிகாரிகளே! இது உங்களுக்குச் சமர்ப்பணம்.

# வன்முறையற்ற சமுதாயத்தில் பெண்






இன்று உலகளாவிய ரீதியில் பெண்கள் உரிமை தொடர்பாகப் பெரியளவில் பேசப்படுகின்றது. பெண்ணினமானது தனக்கெனத் தனி வரலாற்றைக் கொண்டுள்ளதுடன் தனியுரிமை, சமத்துவம், அரசியல் விடுதலை, தன்னாட்சி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உலகிலே பிறந்த ஒவ்வொரு பெண்ணும் சுயகௌரவத்துடன் வாழ அருகதை உடையவள். உலகளாவிய ரீதியில் பெண்களது பிரச்சினைகள், அவர்களது உரிமைப் போராட்டங்கள், பெண்களுக்கெதிரான வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் இவற்றை முன்னுரிமைப்படுத்தி சர்வதேச சமவாயத்தின் கவனத்துக்கு வைத்த பெருமை ஐ.நா. முன்னெடுத்து நடத்திய நான்கு உலக மகளிர் மாநாடுகளுக்கு உரியது. ஆயினும் நாடுகளில் உள்நாட்டு சமூக, பொருளாதார, அரசியல் நிலைப்பாடுகளில் பெண்கள் பாரதூரமான மாற்றங்களை, பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்களா? பெண்களுக்கு எல்லா நிலையிலும் சமத்துவம் வழங்கப்படுகிறதா? என்பது கேள்விக்கு உரியது.

சமத்துவத்திற்காக அடிமைத்தனத்தை எதிர்த்து மகளிர் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைய சமூக அந்தஸ்தை நிலைநாட்ட, அரசியல் ஜனநாயகத்தைப் பேண சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, கல்வி, சிறுவர், முதியோர் நலன்பேண, சட்ட ஒழுங்கை நிலைநாட்ட பாடுபட்ட போதிலும் பெண்களுக்கு எதிராகப் புரியப்படும் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. காலங்காலமாக பால்நிலை சமத்துவம், ஆண்-பெண் சமத்துவம் எனப் பேசப்பட்டு வந்த போதிலும் இன்றுவரை சமூகத் தளத்தில் பெண்கள் மீதான பாரபட்சங்களும் சுரண்டல்களும் வன்முறையும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இந்தப் பால்நிலை வேறுபடுத்தலானது சமூகத்தின் பார்வையில் ஆணையும், பெண்ணையும் வெவ்வேறு கோணத்தில் நோக்க வைக்கிறது. உலகம் முழுமையும் சமூகப் பாகுபாட்டின் காரணமாக அடிப்படை உணவு, போசாக்கு, சுகாதார வசதி, கல்வி, வேலை வாய்ப்பு, சட்டம், தலைமைத்துவம், தீர்மானம் எடுத்தல் போன்ற சகல மட்டங்களிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது, வன்முறை புரியப்படுகிறது.

சமூகத்தில் காணப்படும் ஆண்சார்புப் போக்கும் அதனைக் குடும்பமும் சமூகமும் அங்கீகரிக்கும் நிலைமையும் பெண்ணைச் சிறுமைப்படுத்தி ஓரங்காட்டல்களுக்கு உட்படுத்தி உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. எமது புலங்களை எடுத்து நோக்கும்போது சமூகம், குடும்பம், கலாசாரம் என்ற பதப் பிரயோகங்கள் பெண்களைக் கட்டுப்படுத்துவது மட்டுமன்றி வன்முறைக்கும் உட்பட வைக்கிறது. சமூகத்தில் இருந்துவரும் விழுமியங்களும், நியமங்களும் பெண்களுக்கென சில வரையறைகளை போட்டு அவர்களைச் சமூக அந்தஸ்தற்றவர்களாக மாற்றியுள்ளது. பெண்களின் அந்தஸ்து பற்றிய

அண்மைக்கால ஆய்வுகள் பெண்கள் ஒடுக்கப்படுதலையும் ஆராய்ச்சிக்கு உட்பட்ட சமூகங்களில் அவர்கள் அனுபவிக்கும் அடக்கு முறைகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

பெண்கள் சமூக ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் வன்முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் உட்பட்டு வருகின்றனர். உடலியல் ரீதியாக மட்டுமன்றி உணர்வு ரீதியான பாரபட்சம், அவமானம், புறக்கணிப்பு என அனைத்து வழிகளிலும் அனைத்துத் தளங்களிலும் வன்முறை புரியப்படுகிறது. பிறக்கும்போது சுதந்திரமாகப் பிறக்கும் பெண் சமூகத்தால் திணிக்கப்படும் வரையறைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு நசுக்கப்படுகின்றாள். இதனால் பெண்ணின் ஆளுமையும் தன்னம்பிக்கையும் சிதைக்கப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் சமூகம் கொடுக்கும் தீர்வுதான் என்ன?

''பெண்'' என்ற காரணத்தினால் அவள் அனுபவிக்கும் கொடுமைகள் எத்தனை? தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு வழிதேடத் தெரியாதவர்களாகவும், அதேநேரம் தாம் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுவிட்டோம் என்பதை வெளிக்கொணர முற்படும்போது சமூகத்தின் பார்வை தம்மீது எவ்வாறானதாக அமையும் என்பதும் பெண்கள் முன் எழுந்து நிற்கும் வினாக்கள். எமது சமூகத்தில் வீட்டு வன்முறைக்கு உட்பட்டு அவஸ்தைப்படும் பெண்கள் ஏராளம். இவ் வன்முறை கல்வி கற்றவர், கற்காதவர் என்ற வேறுபாடின்றி அனைத்துத் தளத்திலும் புரியப்படுகிறது. இவை நிரூபணமான உண்மைகள். அதுமட்டுமன்றி இன்றுவரை பெண்ணின் உழைப்பு மதிக்கப்படாத நிலை வருந்தத்தக்க விடயம். பெண்ணை மனிதப் பிறவியாகப் பார்க்க சமூகம் முற்படுமானால் எதற்காக அவளின் அர்ப்பணிப்புக்கள், தியாகங்களைக் கணிப்பிடுவதில்லை. ஆணின் பார்வையில் பெண்ணின் உழைப்பு, அவள் படும் அவஸ்தைகள் தெளிவாகத் தெரியவேண்டும். இந்த விடயத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆண்களே பெண்களுக்கு அனுசரணையாக இருக்கின்றனர். அந்த முன்மாதிரிகள் ஏனைய ஆணாதிக்க வர்க்கத்துக்கு எடுத்துக்கூற முன்வரவேண்டியது அவசியமான கடமையும் பணியுமாகும். இளம் பெண்கள் பலர் காதல் என்ற போர்வையில் ஆண்களின் மாய வலையில் சிக்கித் தவிக்கின்றனர். பெண்களைப் போகப் பொருளாகப் பார்க்கும் ஆண் வர்க்கத்தின் பார்வை மாறவேண்டும். ஆண்-பெண் கவர்ச்சி என்பது இயல்பான விடயம். இந்த விடயத்தைத் தவறான முறையில் கையாள முனையும் ஆண்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஒவ்வொரு பெண்ணும் பல கனவுகள், இலட்சியங்களுடன் வாழ்வியலைத் தொடர்கின்றாள். தனது வாழ்வு தொடர்பான எதிர்பார்ப்புக்கள் ஒரு ஆணால் சிதறடிக்கப்படும்போது அந்த நேர உணர்வுகள், அதிர்ச்சிகள் பலத்த பாதிப்புக்களை அப்பெண்ணுக்கு உண்டுபண்ணி விடுகிறது. இன்றுள்ள எமது சமூகம் நாகரிக மோகத்தின் உச்சத்தை எட்டுமளவிற்கு மாறிவருகிறது. இதனைக் காரணம் காட்டிப் பெண்களின் வாழ்வு சீரழிக்கப்படுவதை சமூகத்தில் உள்ள பெண் நலன் நாடும் அமைப்புக்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு [illegible] போது அதற்குரிய தீர்வினைப் [illegible] தம்மை இனம் காட்டிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி அழிந்து வருகின்றன;
ர்வலருக்குக் கவலை. பூமித்தாய்க்கும்
ாம் முற்றாக அழிவதைப் பூமித்தாய்
கயாகவே எத்தனையோ பறவை
வேறு நாடுகளில் வாழ்கின்றன.
யரும் பறவைகளும் நாடுவிட்டு நாடு
ம் உண்டு. விலங்குகளும்
கமுடியாது. பூமியில் விஞ்ஞானிகள்
காடுகளில் கொண்டு
க்கின்றனர். இது ஏற்புடையதல்ல, பல
வாழமுடியாத குளிர்காலநிலை,
வேறு நாடுகள் சரணாலயங்களுக்குச்
கிறது. பின்னர் திரும்புகின்றன.
இது; பொய்ப்பிக்கிறது. அழிவின்
இனம்பெருக்க, பாதுகாக்க
ட பருவகாலங்கள் வருடம்
சரணாலயங்கள் புகழரன்களுக்கு
ரிலிருந்து வேறு இடத்திற்கு இடம்
ளது. எதிரி விலங்குகள் இல்லாத,
இடங்களுக்கு ஓர் உயிரினத்தை இடம்
உயிரினங்களில் பரம்பல்
ிந்துவரும் உயிரினங்களை
அவசியமாகிறது. இதற்கு
கருத்துக்கு வலுச்சேர்ப்பது பறவைகள்
லயங்கள் புகழரணில் வந்து தங்கி
. தாங்கள் வாழ்ந்த சூழலை விட்டுப்
னை இயற்கை தேர்ந்தெடுக்கிறது;
ஆய்வாளர்களின் ஒருசிலரின் கருத்து
டத்திலிருந்து இன்னோர் சரணாலயம்
ாற்றலாம், பாதுகாக்கலாம் என்பது
ட்படுத்தவும். இது தொடர்பாக
கொள்ளத் தயாராக இருக்கிறேன்.




ணடித் தீர்வு காணப்பட்டுத்
ழக மட்டத்தில் விழிப்பு நிலை
ாவது இல்லாது ஒழிக்க முடியும்.
பற்றிய அறிவும், விழிப்பு
து அவசியமானது. இந்த
ின்றி ஆண்களுக்கும் வழங்கப்பட
னால் தான் புரியும் வன்முறைக்கு
ணர்ந்துகொள்ள முடியும். இன்று
உயர்கல்விக்கூடங்களிலும் கூட
மக்காலமாக அறியக்கூடியதாக
ல் வன்முறைக்கு
சகமாணவர்களால் வன்முறைக்கு
னே நடந்தேறும் நிஜங்கள். இதற்கு
டத்தில் உள்ளோர் தக்க
வேண்டும்
ப்பங்கள் பல காணப்பட்டாலும்
லை. எனவே அதிகரித்துவரும்
டையிலான வன்முறைகள் வீட்டு
ளை வகுக்கவேண்டியது காலத்தின்
ள்ளது என்பதை அங்கீகரிப்பது ஒரு
கொண்டுவர நடவடிக்கை எடுக்க
ம் வலியுறுத்தப்பட வேண்டும்.
ப்புக்கள் பெண்களுக்குத்
ம், அறிவையும் வழங்க முன்வர
ிய மட்டம் வரை செல்ல
ஆண்களிடம் காணப்படும் மனநிலை
ணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
மீது வன்முறை புரியப்படுதல்
ஆண்கள் உணரத் தலைப்பட
சரி சமூக மட்டத்திலும்சரி
ட்டு உரிமைகள் வழங்கப்பட்டு
டுமாயின் வன்முறையற்ற
யும் அபிவிருத்தியும் பண்படங்காகும்
ாம.
முள்ள உறுதி, பலம், விடாமுயற்சி,
ன கொண்டு சமூகத் தளைகளை
நிச்சயமாக வன்முறையற்ற
ந்த சமுதாயம் எதிர்காலப்
பாக அமையும்.
மாலிகை
(க்கலை) அச்சுவேலி தெற்கு,
கவேலி.

# அவுஸ்திரேலியாவில் 5 நாடகங்கள்

பிரவினன்,
அவுஸ்திரேலியா.

நாங்கள் முன்னும் பின்னுமாய் நோக்கி நடுங்குவோம். மானிடர் நாங்கள். ''ஈங்கு நம்மிடத்தே எப்பொருள் இலதோ இல் பொருள் அதனையே விழைவோம்.''

கவிஞர் 'ஷெல்லி' யின் கவிதை வரிகளை அருமையாகத் தமிழ் படுத்தி மனித இயல்பைப் பற்றி முருகையன் சொன்ன வரிகள் இவை.

ஆம் சாதாரணமாகவே, நம்மிடத்தில் எது இருக்கிறது. நாம் எதை வைத்து சந்தோஷமாக இருக்கலாம் என்று பார்ப்பதை விட, நம்மிடம் எது இல்லை, எது இருந்தால் நன்றாக இருக்கும் என்பதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பது மனித இயல்பு. இன்றைய நாளை எப்படி நன்றாக ஆக்கலாம் என்று யோசிப்பதை விட, நேற்று என்ன துன்பம் நடந்ததோ அதையே யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதும் எம் வழக்கம். சாதாரணமாகவே இப்படி என்றால், எமது மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து அல்லற்படும் இக்காலத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. சென்ற காலத்தின் பழுது இலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் பற்றி நம்பிக்கையோடு பேசி மகிழ, சோழர்களின் பொற்காலம் அதிலா நாம் வாழ்கிறோம் இன்று? இறந்த காலம் பயங்கரமாகவும் எதிர் காலம் இருட்டாகவும் இருப்பதே பல தமிழர்களுக்கு உண்மை. இப்படி இருக்கும்போது சிரித்து மகிழ எங்கே நேரம்?

இப்படி நினைக்கும் எமது மக்கள் பலர் உண்டு. அவர்களில் ஒருவரைச் சென்ற மாதம் 10ஆம் திகதி Castle Hill இல் அமைந்துள்ள The Hill Centre of performing Arts இல் சந்தித்தேன். வேட்டி கட்டிய ஒரு நடு வயதுக்காரர். ஒரு மேடையில் தனிமையாகவும் சோகமாகவும் இருந்தார்; நாங்கள் நாளாந்தம் சந்திக்கின்ற ஒரு சராசரித் தமிழர் போலவே இருந்தார். ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் அவர் ஒரு தனி மனிதர் அல்ல. எமது சமூகத்தின் ஒரு குறியீடு. ஒரு வகை மாதிரிப் பாத்திரம் அவர்.




ஆம்! சென்ற 10ஆம் திகதி நடந்தேறிய Laughing O Laughing நாடக அளிக்கையில் வந்த முதலாவது பாத்திரம் அவர்தான்.

Laughing O Laughing நாடக அளிக்கை அவுஸ்திரேலிய தமிழர்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் ஒரு விடயம். சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் 5 நாடகங்களின் தொகுதி. கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று, எம்மவர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்று வருவது. ஆனாலும் முன்பெங்கும் கண்டிராத வகையில் துயரங்களில் எம்மவர்கள் சிக்கித் தவிக்கும்போது சிரித்து மகிழ்வது அவசியம்தானா என்ற வினா அனைவர் மனதிலும் எழுவது இயற்கை. சந்தேகமின்றி, நாடகத் தயாரிப்பாளர்கள் மனதிலும் இந்த வினா உதயமாகி இருக்க வேண்டும். அதற்கு ஒரு பதில் கூறு முகமாகவே அப்படி ஒரு பாத்திரத்தை முதன் முதலில் மேடையில் உலவ விட்டிருந்தனர் நெறியாளர்கள்.

இந்த மனிதர் மேடையில் ஆனந்தி, சந்தோஷ் என்ற இரு தேவதைகளைச் சந்திக்கிறார். இவருடைய மனக்கவலை மாற்றும் மருந்தாக இனி வரும் நாடகங்களைப் பார்த்து, சிரிப்போடு சிந்திப்பதிலும் ஈடுபடுமாறு அவர்கள் அவரைத் தூண்டுகின்றனர். முழு மனம் இல்லாத நிலையிலேயே அரைமனமாக இந்த நபர் நாடகம் பார்க்க இசைகிறார். (நாடகங்களின் முடிவில் அவர் மீண்டும் வருவார்) இந்த நபர் ஒரு வகையிலே மேடையில்





பார்வையாளர்களின் பிரதி நிதியாக இருக்கிறார். பார்வையாளர்களின் ஒத்துணர்வைப் (Empathy) பெறுவதற்காக நெறியாளர்கள் கையாண்ட இந்த உத்தி புதுமையானதாகவும் ரசிக்கத் தக்கதாகவும் இருந்தது.

தொடர்ந்து வந்தவை ஐந்து நாடகங்கள். வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பதிலே எதுவும் ஒன்றுக்கு ஒன்று குறைந்ததாக இல்லை. ஆயினும் சிந்திக்க வைப்பதிலே சில நாடகங்கள் மேம்பட்டு இருந்ததைச் சொல்லத்தான் வேண்டும். பொதுவாக Laughing O Laughing நாடகங்களின் பாரம்பரிய வழக்கத்திற்கு அமைய அவுஸ்திரேலிய தமிழர் வாழ்வினை மையப்படுத்தி இந்த நாடகங்கள் அமைந்திருந்தன. புலம் பெயர் வாழ்விலே எமது மக்கள் எதிர் கொள்ளும் புதிய சவால்கள், தலை முறை இடைவெளி, 'ஊசியின் முனை நுழையக் கூடிய ஒவ்வொரு நாட்டையும் தேடித் தேடிப் போய் ஓசி வாழ்க்கை வாழ' விரும்பும் தமிழர்கள் இயல்பு, தங்களைப் பார்க்காமல் 'எங்கடை சனங்கள்...' என்று தொடங்கி மற்றவர்களை ஒரு வாங்கு வாங்கும் இயல்பு, ஆகியவற்றை ஒரு நகைச் சுவையோடும் எள்ளலோடும் இந்த நாடகங்கள் சித்தரித்தன.

முதலாவது நாடகம் 'ஆச்சி அடிச்சா சிக்ஸர்' அவுஸ்திரேலிய குடியுரிமை பெறுவதற்காகப் பரீட்சை எடுக்கச் செல்லும் ஒரு ஆச்சியைப் பற்றியது. ஆச்சிக்கு அவுஸ்திரேலியாவைப் பற்றி ஒரு இழவும் தெரியாது. ஆனால் உத்தியோகத்தர் கேட்கும் கேள்விகளுக்கு நூற்றுக்கு நூறாக 'சிக்ஸர்' அடித்து வெல்கிறாள். எப்படி? எல்லாம் மொழி பெயர்ப்பிற்காக உடன் செல்லும் மகனின் தயவில் 'What is the capital of Austalia?' என்று கேட்கப்படும் கேள்வியை, 'ஆச்சி! உன்ரை ரண்டாவது மகன் எங்கை எணை வேலை?' என்று மொழி பெயர்க்கிறான் மகன்! ஆச்சியின் பதில் 'கன்பராவிலை'..... சரியான பதில். அருமை. 'நீங்கள் மொழி பெயர்ப்பதற்கு அதிக நேரம் எடுப்பது ஏன்?' என்று உத்தியோகத்தர் கேட்கும் கேள்விக்கு 'உங்களின் பாஷையில் 26 எழுத்து. எங்களின் பாஷையில் 247 எழுத்து. அதனால் நாங்கள் பத்து மடங்கு அதிகம் பேச வேண்டும் தானே?' என்று மகன் கூறும் பதில் ரசிக்கக் கூடியதாக இருந்தது.'சிறிசுகள் ரண்டு, பெரிசுகள் ரண்டு, புடுங்கல் ஒன்று' என்ற நாடகம் நடைபெற்ற ஐந்து நாடகங்களுள் மிகவும் தரமானது என்று கூறலாம்.

(வளரும்)





# மருத்துவ மகத்துவம் கொண்ட தேன்

வ.க.ஜெயபாலன் (ஜே.பி)
யாழ்.விதி, யாழ்ப்பாணம்

எமது உடல் நலத்தை,எம் உணவு பழக்கவழக்கங்களால், மருந்தின்றிப், பேணும்வகையில், எமது மூதாதையர் காட்டிய வழிகளில் மருத்துவ மகத்துவம் கொண்ட மூலிகை உணவுவகைகளில், இவ்வாரம் தேன் எனும், இயற்கை உணவின் மகிமைகளைத் தருகின்றேன்.

உலகம் முழுவதும் போற்றப்படும் மிகச் சிறந்த உணவு தேன் ஆகும். சுத்தமான இயற்கைத் தேன் கெட்டுப் போகாதது ஆகும். சுத்தமான தேன் எது என்று எப்படி கண்டு பிடிப்பது?

ஒரு கண்ணாடி டம்ளரில் நீரை நிரப்பி அதில் ஒரு சொட்டுத் தேனை விட்டால் அந்தத் தேன் துளிஅப்படியே கீழே இறங்க வேண்டும். இது சுத்தமான தேன். தண்ணீரில் கரைந்து கலங்கலாகக் கீழே இறங்கினால் அது கலப்படமான தேனாகும்.

சுத்தமான தேனாக இருந்தால் நாய் முகர்ந்து பார்த்து விட்டுச் சென்று விடும். நாய் சாப்பிட்டால் அது சுத்தமான தேன் அல்லவாகும். சிறிதளவு தேனை ஒரு சிறு கண்ணாடிப் போத்தலில் ஊற்றி நன்றாக மூடிவைத்து விடவும். எத்[illegible] வைத்த தேன் கெட்டுப் போ[illegible] சுத்தமான தேன் என்று முடிவு எடுக்கலாம்.

தேனில் கரி நீரகைகள் 78 பங்கும், தண்ணீர் 18 பங்கும் தாதுப்பொருள்கள் 02 பங்கும் உண்டு. பூவிலுள்ள மகரந்தம் எனிதில் ஆவியாகக் கூடிய எண்ணெய்ச் சத்தும் உள்ளனவாகும்.தேனில் சுக்ரோஸ், டெக்ஸ்ரோஸ் 'டெக்ஸ்டிரியன்' போன்ற சத்துக்கள் உண்டு. தேனில் உள்ள சர்க்கரை யாவும் ஒரு தடவை செரிக்கப்பட்டவையாகும். மக்னீசியம், பொஸ்பரஸ், இரும்பு, சுண்ணாம்பு சத்து ஆகியவை உள்ளதால் குழந்தைகளுக்கு ஏற்ற சிறந்த உணவாகும்.

தேன் இருதய வளர்ச்சிக்கு நன்மை பயக்கும். சுவாசனை, சீதபேதி, மூத்திரப்பை, இருதய நோய்கள், மூத்திரப்பை நோய் இவைகளுக்கு தேன் மருந்தாகப் பயன்படுகின்றது. தேனுடன் இஞ்சி கலந்து சாப்பிட்டால் பித்தம் குணமாகும்.

தேனுடன் தனித்தனியாக இஞ்சித்துண்டுகள், பேரீச்சம்பழம், நெல்லிக்காய் இவைகளை ஊறவைத்து, போத்தலில் சேமித்து வைத்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தினமும் உண்ணலாம். இதனால் உடல் ஆரோக்கியமாகவும் திடமிடுப்பாகவும் நோயின்றியும் வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடமராட்சி மண்ணில் பிராந்திய காரியாலயத்தினை திறந்திருப்பதனை ஒட்டி வடமராட்சி மாணவர்களுக்காக நடாத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி

### போட்டி விதிகளும் பரிசுக் குவியலும்

1. வடமராட்சிப் பிரதேசத்தினைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மட்டுமே இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.
2. விடைத்தாள்களைப் பாடசாலை அதிபர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
3. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம எண்ணிக்கையான சரியான விடைகளை எழுதினால் குலுக்கல் முறை மூலம் பரிசுக்குரிய அதிஸ்டசாலி தெரிவு செய்யப்படுவார்கள்.
4. விடைகளை இந்த விடைத் தாளிலேயே எழுதுதல் வேண்டும், பிரதிகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. பூரணப்படுத்தப்பட்ட கூப்பனுடன் கூடிய விடைத்தாள்களை உதயனின் முகவர் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் அல்லது உதயனின் நெல்லியடிக் கிளையிலுள்ள பெட்டியினுள் போட முடியும்
6. 20.11.2009 முதல் உதயனில் வெளிவரும் இலச்சினைகளை தொடராக விடைத்தாளுடன் இணைத்து அனுப்பினால் வெல்கின்ற பரிசு மடங்கதுகளால் அதிகரிக்கப்படும்.

   **உதாரணமாக : முதலாம் பரிசுக்குரிய மாணவரொருவர் உதயன் இலச்சினைகளை ஒழுங்கு தவறாமல் ஒட்டி அனுப்பி இருந்தால் முதலாம் பரிசான ரூபா பத்தாயிரம் முப்பதாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும்**
7. கூடுதலான எண்ணிக்கையான மாணவர்களைப் பங்கு பெறச்செய்யும் முதல் மூன்று பாடசாலைகளுக்கும் சிறப்புப் பரிசாக ரூபா பத்தாயிரம் வீதம் வழங்கப் படும்
8. நடுவர்களின் தீர்பே இறுதியானதாகும்.
9. சாதாரண விண்ணப்பத்திற்கு குறைந்தது 3 இலச்சினைகளாகவது உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**1ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)

ரூபா 10,000.00
(சாதாரணமாக அனுப்பினால்)

ரூபா 30,000.00
(அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**2ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)

ரூபா 6,000.00
(சாதாரணமாக அனுப்பினால்)

ரூபா 20,000.00
(அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**3 ஆம் பரிசு** (ஒருவருக்கு மட்டும்)

ரூபா 2,500.00
(சாதாரணமாக அனுப்பினால்)

ரூபா 10,000.00
(அனைத்து இலச்சினைகளையும் இணைத்து அனுப்பி இருந்தால்)

**4 ஆம் பரிசு**

ஒரு மாதத்துக்குரிய உதயன் நாளிதழ் பிரதிகளை இலவசமாகப் பெறும் வாய்ப்பு
(ஐம்பது பேருக்கு)

---

25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வார காலம் நீடிக்கப்பட்டுள்ளது என் பதை அறியத்தருகின்றோம்.

இன்று சனிக்கிழமையுடன் முடிவடைய இருந்த இந்தப் போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் விடைத் தாள்களை பாடசாலைகள் மற்றும் உதயன் முகவர் நிலையங்களில் அமைக்கப் பட்டுள்ள விசேட பெட்டிகளில் சேர்ப்பித்து உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யுங்கள்.

---

சிவமயம்

**சிவாகம கலாநிதி அமரர்**
**பிரம்மஸ்ரீ. வை. மு. பரமசாமிக்குருக்கள் அவர்களின்**
**- கோவைக்குரு தரிசனம் -**
**நினைவு மலர் வெளியீடு**

அன்புடையீர் !

ஈழத்தின் மூத்த சிவாச்சாரியாரும் வடகோவை வீரகத்தி விநாயகர் ஆலயப் பிரதம சிவாச்சாரியாரும் கேணியடி வைரவர், நாகதம்பிரான் ஆலய ஆதீனகர்த்தாவும், பலாலை கண்ணகை அம்மன் ஆலய முன்னாள் பிரதம குருவும், நயினை நாகபூசணி அம்பாள் தேவஸ்தான பரம்பரை விஷேஷ உற்சவ சிவாச்சாரியாருமாகிய சிவாகம கலாநிதி குருமணி அமரர் பிரம்மஸ்ரீ. வை. மு. பரமசாமிக்குருக்கள் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் சிறப்புமலர் வெளியீடும் நடைபெறவுள்ளது.

காலம் : இன்று [28.11.2009] சனிக்கிழமை
நேரம் : பி.ப. 1.30 மணி
இடம் : வடகோவை வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபம்.

தலைமை
திரு.ஐ. சிவராஜா அவர்கள்
[செயலாளர், வடகோவை வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை

பிரதம விருந்தினர்
திரு. C.A. மோகன்றாஸ் அவர்கள்
[பிரதேச செயலர், கோப்பாய் பிரதேச செயலகம்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடகோவை
வீரகத்தி விநாயகர் ஆலயம்.

ஆலய பிரதம குருவும்
பரிபாலனசபையினரும்.

(92510)

---

## பொன்சேகாவின் பாதுகாப்புகளை பலவந்தமாக அகற்றும் முயற்சியாம்

கொழும்பு, நவ. 28

முன்னாள் இராணுவத் தளபதியும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளருமான சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக்கு என வழங்கப்பட்டிருந்த படையினரையும் வாகனங்களையும் பலவந்தமாக அகற்றும் முயற்சிகள் இடம்பெற்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதன்கிழமை இரவு சரத் பொன்சேகாவிடம் உள்ள படையினரையும், வாகனங்களையும் பலவந்தமாக அகற்றுவதற்கு இராணுவம் மற்றும் பொலிஸார் முயன்றனர் என முன்னாள் இராணுவத் தளபதியின் அலுவலகத்தை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும், சரத் பொன்சேகா தனக்குள்ள தேவைகளை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியமையைத் தொடர்ந்து அவர்கள் வாகனங்களையும், படையினரையும் அகற்றாமல் அங்கிருந்து சென்றுவிட்டனர் என முன்னாள் இராணுவத் தளபதியின் அலுவலக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (சி)

---

## யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களால் நாடு சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது

### இடதுசாரி முன்னணி அறிக்கை

கொழும்பு, நவ. 28

இந்தியா மற்றும் உலக மேலாதிக்க சக்திகளின் உதவி ஒத்தாசையோடு மஹிந்த ராஜபக்ஷ அரசு தமிழர் எழுச்சியை நசுக்கியது. அது பெரிய வெற்றியாக அவர்களால் கொண்டாடப்படுகிறது. ஆனால் எமது நாடு சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளது. தமிழர் தாயகம் அழிக்கப்பட்டு, அவர்கள் உலகெங்கும் கையேந்தி அலையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் - என்று இடதுசாரி முன்னணி தனது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வெளிநாடுகளில் வாழும் ஏராளமான மக்கள் இந்த அவல நிலையை உருவாக்கிய ஆட்சியாளர்களைத் திட்டுகின்றனர். சிங்களப் பிரதேசத்திலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அல்லது ஊனமுற்றுள்ளனர். பொதுவாகச் சொன்னால் வறிய மக்கள் மென்மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இளைஞர் பலர் வேலை வாய்ப்பின்றித் தவிக்கின்றனர். வாழ்க்கைச் செலவு தாங்கமுடியாமல் உள்ளதோடு, உழைக்கும் மக்கள் யுத்த செலவீனங்களையும் சுமப்பதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அடக்குமுறை மற்றும் புறக்கணிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக இளைஞர் ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கும் நிலை உருவாகும். சமுதாயத்தில் ஊழலும் கையாடலும் சர்வ சாதாரணமாகியுள்ளது. இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் அசுரப் பிடிக்குள் நாட்டின் பொருளாதா ரம் சிக்கியுள்ளது. நாம் இந்திய ஆட்சியாளரிடம் ஏமாளிகளாகியுள்ளோம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நடத்திய மகத்தான வேலையற்ற போராட்டம் கொழும்பில் அலை அலையாக வெடிக்க வைத்து அரசை ஆட்டம் காணச் செய்துள்ளது.

உலக மேலாதிக்க சக்திகளின் ஆதரவுடன் இந்திய ஆட்சியாளர்கள் வழங்கிய நிகழ்ச்சித் திட்டத்தையே மஹிந்த பின்பற்றிவருகின் றார். வேறுபுறத்தில், இலங்கை சமுதாயத்தின் வங்குரோத்துத் தனம் காரணமாக உலக மேலாதிக்க சக்திகள் சார்ந்த அதிதீவிர இராணுவப் பிரிவினர் ஜெனரல் பொன் சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியுள்ளனர். கோரமான உயிர் உடமை அழிப்புகள் செய்து உவகையுற்றிருந்தவராகிய பொன்சேகா இராணுவத்தைப் பலப்படுத்தி மத்தியில் அதிகாரத்தைக் குவித்து வைத்திருப்பதிலேயே அக்கறையாக இருக்கிறார்.

அவரை ஆதரித்து நிற்கும் ஜே.வி.பி. தீட்டியுள்ள சதித்திட்டமானது அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கு இடமின்றி, தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை நசுக்குவதற்கான கருவியாகும். அதுவே பொது வேலைத்திட்ட மாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அது 'மஹிந்த சிந்தனையை' உருவாக்கிய பேரிடிக்கு நிச்சயமாக மாற்றீடாக இருக்க முடியாது. எனவே, தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் அல்லலுறும் பரந்துபட்ட மக்கள் இந்த இடதுசாரி மற்றும் ஜனநாயக கட்சிகள், அமைப்புகள், புத்திஜீவிகள் போன்றோரின் ஆதரவுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் விக்கிரமபாகுவை வேட்பாளராக நிறுத் துவதற்கு இடதுசாரி முன்னணி தீர்மானித்துள் ளது - என்றுள்ளது. (சி)

---

**வலி.தென்மேற்கு கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், சண்டிலிப்பாய்**

**பதவி வெற்றிடம்**

**கிளை முகாமையாளர் (பால்சாலை)**

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.
கல்வித் தகைமை: க.பொ.த.சாதாரண தர சித்தி. கணிதத்துடன் நான்கு பாடங்களில் திறமைச்சித்தி.
வயது: 18-40
விண்ணப்ப முடிவு திகதி: 14.12.2009
"தலைவர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், சண்டிலிப்பாய்" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

(92504) தி.இராஜ்குமார், தலைவர்.

---

**16ஆம் ஆண்டின் நினைவலைகள்**

வையத்துள் 24 ★ 07 ★ 1929



தெய்வத்துள் 25 ★ 11 ★ 1993

(92508)

**அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்**
(ஓய்வுபெற்ற P.W.D.ஓவசியர், R.M.C., R.D.A.)

சந்திரசேகரம் எனும் அருள் விளக்கே!
எம் இதய தீபமே, இந்தொல்லுலகைவிட்டு நீங்கி
பதினாறு வருடங்கள்கழிந்தனவோ
ஆண்டுகள் ஆயிரம்தான் ஆயிடினும் ஆறாதே- எம் நெஞ்சம்
எம் இதய தீபம் அணைந்து விட்ட போதிலும்
அதில்நின்று புறப்பட்ட கருணை ஒளி எம்மைச் சூழ்கிறது.

மாண்பு மிக்க எம் குடும்பத் தலைவரின்
ஆத்மா சாந்தியடைய க.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்
'அன்பகம்',
இணுவில் மேற்கு, இணுவில்.

---

**நெஞ்சை விட்டகலா**

**ஓராண்டு நீங்காத நினைவில்**

மலர்வு 27 . 08 . 1927



உதிர்வு 08 . 12 . 2008

**அமரர் கிருஷ்ணர் திருநாவுக்கரசு**
(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)
திதி: ஏகாதசி

ஓராண்டு ஆனதப்பா எமைவிட்டு நீர் பிரிந்து
கன்றுகளோடு பசுக்களுமாய் கலங்கி நிற்கின்றோம்
என்று நீங்கள் வருவீர்கள்? எம் சிறப்புக்காண
ஒன்றுமே அறியாமல் உங்கள் நினைவால் வாடுகின்றோம்.

நெஞ்சகலாத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம் - II (புதிய பாடத்திட்டம்) 32-T-II

## பகுதி - A

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01. ரூபா 200,000 பெறுமதியான மோட்டார் வண்டி ஒன்று வாடகைக் கொள்வனவு முறையில் முதலில் பெறுமதியின் 2/5 பங்கையும் மீதியை 2 வருடங்களில் சமமாத தவணைக் கட்டணங்களில் கொடுத்தும் பெற்றுக்கொள்ள முடியும்.
   1) எஞ்சிய கடன் பணம் எவ்வளவு?
   2) ஒரு மாத கடன் பணம் எவ்வளவு?
   3) மாத அலகுகளின் எண்ணிக்கையை காண்க.
   4) வருட வட்டி வீதம் 10% எனின், அறவிடப்படும் மொத்த வட்டி யாது?
   5) ஒரு மாத தவணைக்கட்டணம் எவ்வளவு?

02. மாறி x இன் பெறுமானம் சிலவற்றை ஒத்த சார்பு $y = 6-(x+2)^2$ இன் பெறுமானங்கள் இடம்பெறும் அட்டவணை கீழே காணப்படுகின்றது.


| x | -5 | -4 | -3 | -2 | -1 | 0 | 1 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -3 | 2 | 5 | ..... | 5 | 2 | -3 |

a) 1. x = -2 ஆக இருக்கும்போது yஇன் பெறுமானத்தைக் காண்க.
   2. வரைபுத்தாளின் பத்துச்சிறிய சதுரங்களினால் ஓர் அலகு வீதம் வகைக் குறிப்பிடப்படுமாறு அளவிடையை எடுத்து மேற்குறித்த அட்டவணையைப் பயன்படுத்தி சார்பின் வரைபை வரைக.

b) உமது வரைபைப் பயன்படுத்தி,
   1. வளையியின் திரும்பற்புள்ளியின் ஆள்கூற்றைத் தருக.
   2. சார்பின் பெறுமானம் -3இலிருந்து 5இற்கு அதிகரிக்கும்போது xஇன் பெறுமான ஆயிடையைக் காண்க.

c) 1. y = x + 6எனும் நேர்கோட்டையும் மேற்குறித்த ஆள்கூற்றுத்தளத்திலே வரைக.
   2. நீர் வரைந்த நேர்கோடும் வளையியும் சந்திக்கும் புள்ளிகளின் ஆள் கூற்றைத் தருக.


03. 1) காரணிப்படுத்துக. $a^4 - 3a^3 - a^3b + 3a^2b$
   2) செங்கோண முக்கோணி ABC இல் தரப்பட்ட தரவுகளுக்கமைய BC இன் பெறுமானத்தைக் காண்க.
   3) தீர்க்குக. $\sqrt{2p} - 3 = 5$




04. a) $A = \begin{pmatrix} 3 & 5 \\ -2 & 0 \\ 4 & -1 \end{pmatrix}$ , $B = \begin{pmatrix} -2 & 1 \\ 0 & 4 \\ 2 & 5 \end{pmatrix}$
   1. தாயம் Aஇன் வரிசை யாது?
   2. A - 2B இலிருந்து கிடைக்கும் தாயத்தை எழுதுக.
   3. $\begin{pmatrix} 4 & 2 & 1 \\ 0 & 2 & -1 \end{pmatrix} + C = \begin{pmatrix} -2 & 1 & 4 \\ -3 & 2 & 3 \end{pmatrix}$ ஆயின், தாயம் Cயை காண்க.

b) சச்சினிடமும் நிறோவிடமும் உள்ள பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 500 ஆகும். சச்சினிடம் உள்ள பணத்தின் இரு மடங்கிலும் ரூபா 100 குறைவாக நிறோவிடம் உள்ளது. நிறோவிடம் உள்ள பணத்தை P எனவும் சச்சினிடம் உள்ள பணத்தை q எனவும் கொண்டு,
   1. ஒருங்கமை சமன்பாடுகளை அமைக்குக.
   2. அவற்றைத் தீர்ப்பதன் மூலம் அவர்களிடம் உள்ள பணத்தை தனித் தனியே காண்க.

05. A என்னும் கோயிலிலிருந்து 40 திசைகோளில் 4km தூரத்தில் B என்னும் கோயிலுண்டு. B இலிருந்து 130° திசைகோளில் 6km தூரத்தில் C என்னும் கோயிலுண்டு.
   1) தரப்பட்ட தரவுகளை அருகிலுள்ள படத்தில் குறித்துக்காட்டுக.
   2) $A\hat{B}C$ இன் பருமனைக்காண்க.
   3) திரிகோண கணித விகிதத்தைப் பயன்படுத்தி $B\hat{A}C$ இன் பருமனைக் காண்க.
   4) C இலிருந்து A இன் திசைகோள் யாது?
   5) பைதகரஸ் தேற்றத்தைப்பயன்படுத்தி AC இன் நீளத்தை எளிய சேடு வடிவில் தருக.




06. விற்பனை ஸ்தாபனமொன்றில் விற்பனை செய்யப்பட்ட Necto (400ml) சோடாக்களின் எண்ணிக்கை பற்றிய விவரத்தை கீழே அட்டவணை காட்டுகிறது.

| சோடாக்களின் எண்ணிக்கை | 60-54 | 54-48 | 48-42 | 42-36 | 36-30 | 30-24 | 24-18 | 18-12 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 4 | 6 | 8 | 11 | 7 | 6 | 6 | 3 |

   1) இப்பரம்பலின் ஆகார வகுப்பை எழுதுக.
   2) ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக்கொண்டு ஒரு நாளில் விற்பனை செய்யப்பட்ட சோடாக்களின் இடை எண்ணிக்கையை தருக.
   3) சோடா ஒன்றின் விலை ரூபா 30 எனில், ஒரு நாளில் சோடாவினால் பெறப்படும் வருமானம் எவ்வளவு?

## பகுதி - B

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

07. a) பெருக்கல் விருத்தி ஒன்றில் உறுப்புக்களின் கூட்டுத்தொகை Sn = 1-(-2)n இனால் தரப்படின்,
   1. முதலாம் உறுப்பைத் தருக.
   2. பொது விகிதத்தைக் காண்க.
   3. (-255) எத்தனை உறுப்புக்களின் கூட்டுத்தொகை எனக்காண்க.

b) (p+2), (p-2)என்பவற்றின் கூட்டல் இடை p உம், 5ஆம் உறுப்பு (-4) எனில்,
   1. பொது வித்தியாசத்தைக் காண்க.
   2. p இன் பெறுமானத்தைக் காண்க.
   3. முதல் 8 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைத் தருக.

08. cm/mm அளவிடை உள்ள ஒரு நேர்விளிம்பையும் கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக்கோடுகளை தெளிவாகக்காட்டி,
   1) AB = 7cm, $B\hat{A}C = 45^0$, $A\hat{B}C = 60^0$ ஆகுமாறு முக்கோணி ABC ஐ அமைக்குக.
   2) புள்ளி C இலிருந்து நேர்கோடு AB இற்கு ஒரு செங்குத்து வரைக. அது AB ஐ சந்திக்கும் புள்ளியை D எனப்பெயரிடுக.
   3) CD இற்கு சமாந்தரமாக B இனூடாக ஒரு நேர்கோட்டை வரைக. அது நீட்டப்பட்ட AC ஐ D இல் சந்திக்கட்டும்.
   4) DE ஐ இணைத்து அதன் நீளத்தை அளந்தெழுதுக.
   5) முக்கோணி BCD இற்கு சமபரப்புடைய முக்கோணி ஒன்றைப் பெயரிடுக. உமது விடைக்கான காரணத்தைத் தருக.
   6) பக்கம் AB ஐ D இல் தொடுவதும் புள்ளி E இனூடாக செல்வதுமான வட்டத்தை வரைக.
   7) புள்ளி A இலிருந்து வட்டத்திற்கு வரையத்தக்க மற்றைய தொடலி AF எனில், F இன் அமைவைக் காட்டுக.


09. a ஆரையும் 3a உயரமும் உடைய திண்ம உருளையையும், a ஆரையுடைய அரைவட்ட திண்மக்கோளத்தையும் கொண்ட பகுதியிலிருந்து a ஆரையும் a உயரமும் உடைய திண்ம செவ்வட்ட கூம்புப்பகுதி அகற்றப்பட்டுள்ளது. உருவைப் பார்க்கவும்.



   1) உருவிலுள்ள உருளை, அரைக்கோளம், கூம்பு ஆகியவற்றின் கனவளவை πa இல் தருக.
   2) கூம்பு அகற்றப்பட்டபின் எஞ்சியுள்ள பகுதியின் கனவளவை $10/3\pi a^3$ எனக் காட்டுக.
   3) எஞ்சிய பகுதியின் கனவளவு எதுவும் வீணாகாதவாறு அதனை உருக்கி X ஆரையுடைய கோளம் ஒன்று செய்யப்பட்டது. கோளத்தின் ஆரையை $\sqrt{2.5}a$ எனக்காட்டுக.
   4) a = 3.42 எனக்கொண்டு கோளத்தின் ஆரையை (X) காண்க.

10. a) வட்டத்தின் வில் ஒன்று மையத்தில் எதிரமைக்கும் கோணம் அவ்வில் பரிதியின் எஞ்சிய பகுதியின் மேல் எந்த ஒரு புள்ளியிலும் எதிரமைக்கும் கோணத்தின் இரு மடங்காகும் எனும் தேற்றத்தை நிறுவுக.

b) O வை மையமாகவுடைய வட்டத்தில் AD விட்டம். B,C என்பன பகுதியில் உள்ள இரு புள்ளிகள் AB//OC.
$O\hat{A}B = 42^0$ எனின், பின்வரும் கோணங்களின் பெறுமதியைக் காண்க. உமது விடைக்கான காரணங்களையும் தருக.
   1. $C\hat{O}D$
   2. $A\hat{B}C$
   3. $O\hat{C}B$
   4. $B\hat{D}C$





11. a) 1) நடுப்புள்ளித் தேற்றத்தைக் கூறுக.
   2) இணைகரத்தின் பண்புகள் 4 தருக.

b) முக்கோணி ABC இல் பக்கம் AC, AB என்பவற்றின் நடுப்புள்ளிகள் முறையே E, F ஆகும். BEயும் CFஉம் Gஇல் வெட்டுகின்றன. நீட்டப்பட்ட AG ஆனது பக்கம் BC ஐ D இலும், CF இற்குச் சமாந்தரமாக B இற்கூடாக வரையப்பட்ட கோட்டினை M இலும் சந்திக்கின்றது.
   1) முக்கோணி ABC ஐ வரைவதன் மூலம் மேற்குறித்த தகவல்களை அதில் விரிவுபடுத்துக.
   2) AM இன் நடுப்புள்ளி G எனவும்;
   3) CM//BE எனவும்;
   4) BGCM ஓர் இணைகரம் எனவும் நிறுவுக.

12. a) 1) குறித்த ஒரு கிழமையில் ஜீவிதன் பாடசாலைக்கு செல்வதற்கான நிகழ்தகவு 4/5 எனக்கொண்டு பாடசாலைக்கு செல்லுதல், செல்லாமல் விடுதல் ஆகிய சந்தர்ப்பங்களைக் காட்டும் மரவரிப்படத்தை வரைக.
   2) பாடசாலை செல்லும் ஜீவிதன், ஆசிரியர் கொடுத்த ஒப்படையை கையளிப்பதற்கான நிகழ்தகவு 2/3 எனக்கொண்டு அது இயலும், இயலாத சந்தர்ப்பங்களைக் காட்டத்தக்கதாக மேலே நீர் வரைந்த மரவரிப்படத்தை விரிவுபடுத்துக.
   3) ஜீவிதன் பாடசாலைக்கு சென்று அறிக்கையை கையளிக்காமைக்கான நிகழ்தகவைக் காண்க.

b) 1 - 6 எண்ணிடப்பட்ட கோடாத சதுரமுகித் தாயக்கட்டை ஒன்றை உருட்டும் எழுமாற்று பரிசோதனை ஒன்றில் முதன்மை எண் கிடைப்பதற்கான நிகழ்ச்சி A எனவும், சதுர எண் கிடைப்பதற்கான நிகழ்ச்சி B எனவும் கொள்க.




   1. P(A)
   2. P(B)
   3. $P(A \cup B)$
   4. $P(A \cap B)$ என்பவற்றைக் காண்க.
   5. A, B என்பன தம்முள் புற நீங்கும் நிகழ்ச்சிகள் எனக்காட்டுக.

-நிறைவுற்றது-

ஆசிரியர்: வீ.ஜெகதீஸ்வரன்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
தொலைபேசி இலக்கம்: 0772395842

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் முகம் மக்கள் முகம்



கோப்பாய், நவ.28

கோப்பாய் தெற்கு றோ.க.பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய ச.லலீசன் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகக் கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சரசாலையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட இவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வி முதுமாணி, தமிழில் முதுகலை மாணிப் பட்டங்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத்துச் சொற்பொழிவுத் துறையில் பிரபலம்பெற்ற இவர் இலக்கியக் கட்டுரை, கவிதை முதலிய துறைகளிலும் ஈடுபாடு காட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

## புத்தகசாலை

### அச்சு மத்திய தீபம்



அச்சுவேலி மத்திய கல்லூரியின் 'அச்சு மத்திய தீபம்' சுடர்-01 வெளியிடப்பட்டுள்ளது.

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளையும், மாணவர்களுடைய பல்துறைசார் ஆக்கங்களையும் அத்துடன் சமய, சமூகக் கட்டுரைகளையும் தன்னுள்ளே கொண்டு 'அச்சு மத்திய தீபம்' சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.

கல்லூரியின் ஆசிரியர் குழு, விளையாட்டு மற்றும் கல்வித் துறைகளில் சாதனைபடைத்த மாணவர்களதும் புகைப்படங்களையும் தாங்கி வந்துள்ளது.

### சிவத்தமிழ் செல்வம்



சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் முதலாமாண்டு நினைவாக த.சண்முகசுந்தரம் எழுதிய 'சிவத்தமிழ் செல்வம்' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான தலைவராக இருந்து சிவப்பணியில் மட்டுமல்லாது சமூகப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சைவத்தின் பெருமைதனை உலகெங்கும் பறைசாற்றிய பெண்மணி அமரர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்க்கைத் தடங்களை சுமந்து வெளிவந்திருக்கிறது.

அத்துடன் சிவத்தமிழ் செல்வியின் சமய, சமூகப் பணிகளின் பதிவுகளும் இதில் பொறிக்கப்பட்டுள்ளது.

எம்மத்தியில் சமகாலத்தில் வாழ்ந்து சைவப்பணிக்கும், சமூகப் பணிக்கும் அளப்பரிய தொண்டாற்றிய மறைந்த ஒரு சமயப் பெரியாரின் வாழ்க்கைப் பதிவினை அச்சேற்றி நூலுருவாக்கியவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இளம் சமூகத்தினர் படித்துக் கொள்ளக் கூடியதாக சிவத்தமிழ் செல்வம் வெளிவந்துள்ளது.

### வெட்டைமலர்கள்



சுழிபுரம் பறாளாய் காவேரி கலாமன்றத்தினரின் கிராமிய சிந்தனை ஊற்றான 'வெட்டை மலர்கள்' வெளியிடப்பட்டுள்ளது.

கவிதைகள், கட்டுரைகள், செய்திகள், நகைச்சுவைத் துணுக்குகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தாங்கியவாறு 'வெட்டை மலர்கள்' வெளிவந்துள்ளது.

தாம் சார்ந்த கிராம மக்களின் சிந்தனைகளுக்கு சிறகு வைப்பதுபோன்ற முயற்சியாக 'வெட்டை மலர்கள்' மலர்ந்திருக்கிறது.

### நூல்-தீந்தேன்



ஆசிரியர்: பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்

நோய் தீர்க்கும் தேன்-தீந்தேன் என்பது இந்நூலின் பெயராகும். சிறுவர்களின் அறிவுப் பசியைப் பக்குவமாகவும் பவ்வியமாகவும் போக்கவல்ல இனிய பாடல்கள் இந்நூலில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. சொல்லாட்சி மெச்சத்தக்க வகையில் அமைந்துள்ளமையால் பொருள்வளத்தை ஆழமாகவும் அகலமாகவும் விரிவுபடுத்துகின்றது. கவிஞனின் பண்பட்ட தமிழ் நெஞ்சம் குழந்தை உள்ளமாய் ஒத்திசைந்து ஓசைநயத்தை வாரி இறைப்பது ஒரு தனிச் சிறப்பாகும். நூலின் எழிற்கோலம் பெரிதாக அமையாவிட்டாலும் பொருளடக்கம் பொலிந்து காணப்படுகின்றது.

பண்டிதர் கடம்பேசுவரனின் குழந்தை உள்ளப் பிரதிபலிப்பும், விடாமுயற்சித் திறனும் பாடல்களில் பளிச்சிடுகின்றன. ஆசிரியத்துவம் அரசோச்ச அருந்தமிழ் முழக்கம் பாலர்-சிறுவர் நிலைப்பாங்காய் அமைந்திருப்பது பாராட்டுக்குரியதே.

அழவள்ளியப்பா சோமசுந்தரப் புலவர், கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை போன்றோர் வரிசையில் தொட்டதுறை விளங்க ஈழமண்ணிலே கன்னித்தமிழ் கொஞ்சும் கற்றறிந்த பெரியோர் விஞ்சும் குபேரதிசையில் ஒளிரும் பாதி கடந்த பன்னீராட்டைப் பராயத்தே பாடுங் கவிதைகள் சிறுவர் தேடும் கவிகளே.

சிறுவர் உள்ளங்கள் நாடும்படி நல்ல பல கவிகள் இந்தத் தமிழ் எழினியான் கடம்பேசுவரனின் உள்ளத்தே ஊற்றெடுக்கும் அனைத்துக்கும் அன்னாரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமைக்கு கட்டியங்கூறுவதுபோல் மொழிப்பற்று, இனப்பற்று இழையோடும் பாக்கள் உள. இனத்தின் நிலைபேற்றிற்கு மொழிப்பற்று இன்றியமையாததே. அதுவும் ஐந்திலே சிந்தையிலே நிறைய வேண்டும். ஐம்பதிலல்ல என்ற எண்ணக் கரு கவிஞனின் உள்ளத்தே எக்காளமிடுகின்றது. மேலும் பாடுகருவியாக இயற்கையில் காணப்படும் பொருள்கள், உயிர்கள் கவிஆக்கப் பொருளாய் ஊக்கி நிற்பதும் உவகை தருவதோடு- உணர்வினையும் தொட்டு இசை பாடுகின்றது.

கோ.சி.வேலாயுதம்.


### பாலன் மில்

தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய் } ஆலை

கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்ததும்) சூரியகாந்திவிதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோவரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெயாக உடன் ஊற்றித் தரப்படும். நாடவேண்டிய ஒரேஇடம்

பாலன் மில், மாவடிச்சந்தி,
வட்டுக் கோட்டை.



### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர்,கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.


நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர். (90711)


### மாப்பியன் வீதி புனரமைப்பு

45 வருடங்களாக திருத்தம் செய்யப்படாமலிருந்த ஆனைக்கோட்டை அரசடியிலிருந்து சுதுமலை செல்லும் மாப்பியன் வீதி மானிப்பாய் பிரதேச சபையினால் 15 லட்சம் ரூபா செலவில் தாரிட்டு செப்பனிடப்பட்டு வருகின்றது.

ஒருகிலோ மீற்றர் நீளமுடைய இவ்வீதியை திருத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அப்பகுதியிலுள்ள அம்பாள் சனசமூக நிலைய இளைஞர்களும் இந்தத் திருத்தப் பணிகளுக்கு உதவி வருகின்றனர். (50-100)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி கு.சிவராணி
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி குமாரசாமி வைரமணி**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
மானிப்பாய் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை




டென்மார்க் தலைநகரில் இணுவைக் கவிஞர் சக்திதாசனின் நூலான ''ஓர் அகதியின் கைரேகை'' எனும் கவிதைநூல் அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்விற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராஜா தலைமை வகித்தார்.

அவருடன் நூலாசிரியர் கவிஞர் சக்திதாசன் நிற்பதைப் படத்தில் காணலாம்.



அண்ணா தொழில் நிறுவனத்தின் பொன் விழாவை முன்னிட்டு தொழிலதிபர் லயன் எஸ்.பி.நடராசாவைக் கௌரவிக்கும் நிகழ்வு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் அண்மையில் நடத்தப்பட்டது. இதில் லயன் எஸ்.பி.நடராசாவுக்கு லயன் செ.மகாதேவா மலர்மாலை அணிவித்துக் கௌரவிப்பதையும் அருகில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் என்.சண்முகவேல் நிற்பதையும் படத்தில் காணலாம். (-9)

## வன்னியில் இருந்து 664 பேர் வருகை

யாழ்ப்பாணம், நவ.28

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்திற்கு 209 குடும்பங்களைக் சேர்ந்த 664 பேர் கடந்த 25 ஆம் திகதி அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட இவர்கள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் தங்க வைக்கப்பட்டு நேற்று முன்தினம் இராமாவில் நலன்புரி நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு அங்கு தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.


## ZION CHURCH - JAFFNA

சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்

50th Year

50 ஆம் ஆண்டு

1959 

2009

We thank God for HIS Mercies

ஆண்டவருடைய கிருபைகளுக்காக நன்றி செலுத்துகின்றோம்

EBENEZER – Hitherto hath the Lord helped us. 1 Samuel 7:12

எபெனேசர் - இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். 1 சாமுவேல் 7:12

*Elders, Pastors, Workers & Believers.*

மூப்பர்கள், போதகர்கள், ஊழியக்காரர் மற்றும் விசுவாசிகள்.

*24 Ramiah Chettiar Lane - Jaffna*

24 , இராமையார் செட்டியார் ஒழுங்கை- யாழ்ப்பாணம்.

*E-mail-jazion@sltnet.lk*

*T.P: 0094212222707*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தாச்சிப் போட்டியில் சம்பியனான தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலயம், இரண்டாம் இடத்தைப் பெற்ற மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம், மூன்றாம் இடத்தைப் பெற்ற அளவெட்டி சதானந்தா அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றின் அணிகள், ஆசிரியர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்களுடன் நிற்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக

# வடமாகாணக் கல்வி வலயங்களுக்கிடையே விரைவில் உதைபந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு, நவ.28

வடமாகாண மட்டத்தில் மாவட்ட கல்வி வயலங்களுக்கு இடையே 19 வயதுப் பிரிவினர்களுக்கான ஆளுநர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த 5 அணிகளுடன் மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த தலா இரு அணிகளும் மற்றும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த அணிகளும் இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திற்கு பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்கள் இப் போட்டியின் இணைப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அடுத்தமாத முற்பகுதியில் நடைபெறும் இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிகளுக்குப் பெறுமதியான பணப் பரிசுகள் வழங்கப்படுவதுடன், சான்றிதழ்கள், வெற்றிக் கிண்ணம், வீரர்கள் பதக்கங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-86)

### கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் விற்பனை நிலையம்

கல்வி அமைச்சின் பாடநூல் வெளியிட்டுத் திணைக்களம் தனது வெளியீடுகளை விற்பனை செய்யும் முகமாக யாழ். மத்திய கல்லூரியில் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துவைக்கவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் விற்பனை நிலையம் எதிர்வரும் 8ஆம் திகதி வைபவரீதியாக திறந்து வைக்கப்படும் எனவும் யாழ்.மத்திய கல் லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தெரிவித்துள்ளார். (50-23)

# வடமாகாண உதைபந்தாட்ட அணியை இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு

## மூன்று மாவட்டங்களிலிருந்து வீரர்கள் தெரிவு

வலி.வடக்கு, நவ.28

வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் வடமாகாண உதைபந்தாட்டத் தெரிவு அணியொன்று இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் வடமாகாண விளையாட்டுத் தலைவர்கள் பிரதிப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலிருந்து 10 வீரர்களையும், மன்னார் மாவட்டத்திலிருந்து 10 வீரர்களையும், வவுனியா மாவட்டத்திலிருந்து 5வீரர்களையும் அழைத்து வவுனியாவில் பயிற்சிகளை வழங்குவதுடன் சிறந்த தெரிவு அணியை ஏற்படுத்தி இந்தியாவுக்கு அழைத்துச் சென்று போட்டிகளில் பங்கு பற்றுவது எனவும் இதன் மூலம் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கான ஊக்குவிப்பை ஏற்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்கள் மற்றும் கல்வி வலயங்களின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர். (50-86)

### பெண்கள் கிரிக்கெட் அணிக்கான தெரிவு

யாழ்.மாவட்டத்தில் பெண்கள் கிரிக்கெட் அணி ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான பதிவுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன எனவும், இதில் 15 வயதுக்கும் 27 வயதுக்கும் உட்பட்ட பெண்கள் அணியில், உள்வாங்கப்படவுள்ளார்கள் என ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பயிற்சி முகாமையாளர் மல்கம் பெரேரா தெரிவித்துள்ளார். (50-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# ஜேர்மன் நாட்டுப் பயிற்றுவிப்பாளர் திங்களன்று யாழ்ப்பாணம் வருகிறார்

## யாழ்.வீரர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவார்

யாழ்ப்பாணம், நவ.28

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்தின் பயிற்றுவிப்பாளர் பிவங்கமன் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ்ப்பாணம் வரும் அவர் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள 15 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கான மெய்வல்லுநர் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

இவருடன் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் செயலாளர் பிறேமா பின்வலவும், தென்னிலங்கையைச் சேர்ந்த மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர்களும் யாழ்ப்பாணம் வருகின்றனர். அவர்கள் மெய்வல்லுநர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள 15 வயது கீழ்ப்பட்டோருக்கான மெய்வல்லுநர் பயிற்சி முகாமில் கலந்துகொள்வர். (50-23)

# சிறந்த பந்துவீச்சாளராக அஜித் டார்வின் தெரிவானார்

வலி.வடக்கு, நவ.28

யாழ்ப்பாணம்.செ்ன்.பற்றிக்ஸ் கல்லூரி வீரன் அஜித் டார்வின் இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட 'பிரிமியர்' கிரிக்கெட் கிண்ணத்துக்கான



யாழ்.மாவட்டப் பயிற்றுவிப்பாளர் வி.கே.சண்முகலிங்கம், வடக்கு- கிழக்கு மாகாணக் கிரிக்கெட் பயிற்றுநர் மஞ்சுள கருணாரட்ண ஆகியோருடன் அஜித் டார்வின்.

போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட 15 வயதுப் பிரிவினருக்கான தெரிவு அணியில் இடம்பெற்ற இவர் வடக்கு கிழக்கு மாகாண அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியிலும் மற்றும் தெ... பகுதி அணிகளுக்கு இடையே இடம்பெற்ற போட்டிகளிலும் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் திருகோணமலை மாவட்டத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியிலும்கூட சிறந்த ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

15 வயதுப் பிரிவு யாழ்.மாவட்ட அணி மோதிய போட்டிகள் அனைத்திலும் சராசரியாக ... தடுப்பாட்டத்திலும் தனது முழுமையான பங்களிப்பை அணியின் வெ... ...களுக்காக வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

# 513ஆவது படையணி நடத்தும் கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

வலி.வடக்கு, நவ.28

513ஆவது படையணி 'இளைஞர்களுக்கான சமாதானம்' என்னும் தொனிப் பொருளின்கீழ் நடத்திய ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு உடுவில் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய இறுதிப் போட்டியில் ஏற்கனவே நல்லூர், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகங்கள், உடுவில்- தெல்லிப்பழைப் பிரதேச செயலகங்கள், சங்கானைப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற இறுதிப்போட்டிகளில் மோதிக்கொண்ட ஆண்கள் பிரிவில் தலா இரண்டு கழகங்கள் வீதம் ஆறு கழகங்களும், பெண்... வீதம் மூன்று ... கலந்துகொள்ளவுள்ளன. (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி துறந்தார் நந்தன குணதிலக புதிய அமைச்சராக அஜ்ல நியமனம்

கொழும்பு, நவ. 28

இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச் சராகப் பதவி வகித்த நந்தன குணதிலக, தமது அமைச்சர் பதவியை நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்தார்.

இந்தப்பதவி வெற்றிடத்துக்கு இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜ்ல சுரங்க யாகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் அஜல சுரங்கயாகொட சுற்றுலாத்துறை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த 4 மாதங்களுக்கு முன்னரே நந்தன குணதிலக சுற்றுலாத்துறை அமைச்சராகப் பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவின் கடுமையான வேண்டுகோளுக்கமைய, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது பிரச்சினை ஏற்படாத வகையில், அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்வதற்கு நந்தன குணதிலக தீர்மானித்தார் என சுற்றுலாத் துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


## சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்விட்டு
## 'மனித உரிமைகள் இல்லம்'
நடத்தும்
## கைப்பணி ஆக்கப்போட்டி - 2009

*10.12.2009 அன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மனித உரிமை கள் இல்லத்தினால் நடத்தப்படும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள கைப்பணி ஆக்கப் போட்டி பற்றிய விவரம்:*

**போட்டி விவரம்:**
1ஆம் பரிசு: ரூபா 7000
2ஆம் பரிசு: ரூபா 5000
3ஆம் பரிசு: ரூபா 3000

ஆறுதல் பரிசுகள் தலா 500 ரூபாய்ப்படி 10 பேருக்கு வழங்கப்படும்.

போட்டித் தலைப்பு:

**மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் இன்றைய சமுதாயத்தின் பங்களிப்பு**

**போட்டி விதிமுறைகள்:**
1. உங்களது ஆக்கம் மனித உரிமைகளைக் கருப்பொருள்களாக, எழுத்துருவாக்கங்களாக, கைப்பணிப் பொருள்களாக அல்லது உருவவெளிப்பாடாக அமைதல் வேண்டும்.
2. ஆக்கங்கள் போட்டியாளரது சொந்தப்படைப்பாக அமைதல் வேண்டும்.
3. பயன்படுத்தும் மூலப்பொருள்கள் உள்ளூர் உற்பத்திப் பொருள்களாக அமைய வேண்டும்.
(உ+ம்: பனைஓலை, அரிசி, கடற்சிப்பிகள்)

போட்டிப்பிரிவு: பிரிவு 1 - மாணவர்கள் பிரிவு 2 - மாணவர்கள்

ஆக்க முடிவுத் திகதி: 05.12.2009

ஆக்கங்கள் கையளிக்கப்பட அல்லது அனுப்பவேண்டிய முகவரி:
இணைப்பாளர், மனித உரிமைகள் இல்லம், இல.58, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரப்படிவம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக ஆக்கங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

மாணவ/மாணவிகள் முழுப்பெயர்:
1. தற்போது கல்வி பயிலும் தரம்:
2. பிறந்த திகதி: ஆண்டு...... மாதம்......... திகதி.......
3. பாடசாலையின் பெயர்:
4. பாடசாலையின் தொலைபேசி இலக்கம் (இருப்பின்)
5. வீட்டு முகவரி:
6. பாடசாலை அதிபரின் சிபார்சு:

தயாரித்து அனுப்பப்படும் ஆக்கங்கள் யாவும் 10.12.2009 அன்று வீரசிங்கம் மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
மனித உரிமைகள் இல்லம்
இல. 58, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 7576

(92530)


## இலவச மருத்துவ முகாம்

'சொண்ட்' நிறுவனமும் யாழ். லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவமுகாம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நாவாந்துறை றோ.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் இலவச கண் பரிசோதனை மற்றும் இலவச கண்ணாடி வழங்கல், நீரிழிவுப் பரிசோதனை, இரத்தப்பரிசோதனை ஆகியன இடம்பெறுவதுடன் இலவசமாக மருந்து வகைகளும் வழங்கப்படவுள்ளன. எனவே அனைத்து மக்களையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு 'சொண்ட்' நிறுவனத்திட்ட முகாமையாளர் கேட்டுள்ளார். (50-201)

## அமரர் ஞானப்பிரகாசம் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 28

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் நினைவு தினமும், மரம் நடும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்றக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவி திருமதி ஜெபமணி ஜோசப் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அமரர் ஞானப்பிரகாசத்தின் நினைவுப் பேருரையை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் நிகழ்த்துவார். (50-224)

## கார்த்திகை விளக்கீட்டு உற்சவம்

யாழ்ப்பாணம், நவ. 28

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கார்த்திகை விளக்கீட்டு உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் கும்பப் பூசையுடன் உற்சவம் ஆரம்பமாகி சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம் பெறும். (50-204)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் நவ28

யாழ். ஆய்வாளர் அணியத்தின் ஏற்பாட்டில் 'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலும் தமிழ் மக்களும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல. 189, வேம்படி வீதியில் அமைந்துள்ள விழுது அகவிழி அலுவலகத்தில் ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்கில் ஆர்வமுள்ள ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு யாழ். ஆய்வாளர் அணியம் அறிவித்துள்ளது. (50-201)


## மரண அறிவித்தல்
### சிவபாலரட்ணம் சிவாகரன் (ரவி)

(முன்னாள் உரிமையாளர், யாழ். சைனீஸ் ரெஸ்றோறன்ட், பின்பு முதலாம் குறுக்குத்தெரு, பஸ்ரியன் ஹோட்டலில் பணிபுரிந்தவர்)



வத்தளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 37 B, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலரட்ணம் சிவாகரன் கடந்த 05.11.2009 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாலரட்ணம் மற்றும் றுக்குமணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் மகேஸ்வரி (இராசாத்தி) தம்பதியினரின் அன்பு மருமகனும் சுகிர்தகுமாரியின் (யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய முன்னாள் ஆசிரியை, தற்போது சிலாபம் தமிழ் மகாவித்தியாலயத்தின் ஆசிரியை) அன்புக் கணவரும் மோனோஜ்சின் (முன்னாள் மாணவன் யாழ்.பரியோவான் கல்லூரி) பாசமிகு தந்தையும் சுவிற்றி, பபா, செல்வி, செல்வா ஆகியோரின் அன்புச் சகோதரரும் உதயகுமாரி, சிவகுமாரன் (Technician), கிருஸ்ணகுமார் (முன்னாள் பணியாளர், யாழ். I.C.R.C ) ஆகியோரின் மைத்துனரும் ஞானேஸ்வரியின் (ஆசிரியை, யாழ்.சென்.றோக்ஸ்) உடன்பிறவாச் சகோதரனும் துளசிகா, துவாரகா, துளசிகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 23.11.2009 அன்று லண்டனில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
சுகிர்தகுமாரி (மனைவி-ஆசிரியை)
T.P: 0322223669

21, சிங்கபுர றோட்,
சிலாபம்.

(92487)



## நான்காவது குருபூசைத்தினம்
### கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
M.A. Ph.d



**அருட்கவிக் கீதம்**

அருட்கவி எங்கள் உயிர்க்கவி - நாளும்
ஏத்துவோம் உங்கள் பாதக்கனி
நமக்கினி இந்தவுலகினில் - வேறு
தெய்வ முண்டோ அருள் ஒளி

தாயுமாய் தந்தை குருவுமாய் - மேலாம்
தெய்வமாய் நடமாடினீர் இன்று
வானுளோர் போற்றும் தெய்வமாய்
காசிலிங்கமாகிய சோதியே.

நோயென வரும் மக்களை நொடிப்
பார்வையால் குணமாக்குவீர்
வாடியே வரும் அன்பரை வாய்ப்
பேச்சினால் இன்பம் கொடுத்திடும்

திருநீறு ருத்ரமாலையும் காவி
உடையுமாய் வீதிவலம் வரும்
சோதிட வைத்திய கவிஞனாம்
விநாசித்தம்பி என்னும் மகாத்மாவே

ருத்றோட்சாரி ஐப்பசி மகம்
மனோன்மணி நாரணரூபமாய் - வந்து
பார்த்திப கார்த்தி ரேவதி காசி
லிங்கமாகிய அருள் ஒளி.

*இன்று (28.11.2009) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் அன் பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்,
அளவெட்டி.
**குரும்பத்தினர்.**

(92500)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## ஏல விற்பனை

**யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் தேவைக்கென வாங்கப்பட்ட பின்வரும் பொருள்கள் 30.11.2009 திங்கட்கிமை ஏலத்தில் விடப்படவிருக்கின்றன.**

காகிதாதிகளும் எழுது பொருள்களும்

| | |
|---|---|
| அக்ரோன் ஒயில் கலர் (20 X 24 மி.லீ) | - 39 ரியூப் |
| அக்ரிலிக் கலர் (250 மி.லீ) | - 27 ரியூப் |
| ஒயில் பெயின்ரிங் தூரிகை | - 46 |
| வோட்டர் கலர் தூரிகை | - 48 |
| அப்பியாசக் கொப்பி 80 பக்கங்கள் | - 2242 |
| பலட் நைவ் (1 X 5 கத்திகள்) | - 31 செற் |
| போஸ்டர் கலர் | - 18 செற் |
| பென்சில் கலர் (1 X 24) | - 29 செற் |
| போஸ்ரர் கலர் அக்ரோன் (10 மி.லீ X12) | - 29 பெட்டிகள் |
| ரீவ்ஸ் கலர் (22மி. லீ) | - 4 ரியூப் |
| வோட்டர் கலர் அக்ரோன் (6மி.லீ X 12 ) ரியூப் | - 38 செற் |

ஏனையவை

| | |
|---|---|
| சவர அலகு (பிக்) | - 5419 பைக்கற் |
| உணவு சுற்றும் தாள் | - 794 பைக்கற் |
| சேவிங் றேசர்(பிக்) | - 5974 |
| பற்தூரிகை (சிக்னல்) | - 1893 |
| சனிற்றரி ரவல் (ஈவா, பிறி அன் ஈசி) | - 1359 |

*இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் 30.11.2009 அன்று முற்பகல் 11 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தின் நலச்சேவைகள் அலுவலகத்திற்குச் சமுகமளிக்கவும். பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு முன்னர் உதவிப் பதிவாளர், நலச்சேவை கிளையுடன் தொடர்பு கொள்ளவும். வெற்றி பெறும் ஏலதாரர் முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே பொருள் [illegible]டுத்த வேண்டும்.*

**பதிவாளர்.**

(சி/562754)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நாடாளுமன்றில் கடும் வாக்குவாதம்;
# நேற்று அத்வானி - முகர்ஜி கடும் மோதல்



டில்லி, நவ. 28

மும்பையில் கடந்த ஆண்டு தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் பலியானவர்களுக்கு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. மும்பைத் தாக்குதலில் பலியான மற்றும் காயமடைந்தவர்களுக்கு இன்னமும் நிவாரண உதவி வழங்கப்படாமல் இருப்பது குறித்து அத்வானி பேசியதால் பிரணாப் முகர்ஜியுடன் மோதல் ஏற்பட்டது.

மும்பைத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மக்கள் மற்றும் உயிர் தியாகம் செய்தவர்களுக்கு நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. மன்றத்தில் சபாநாயகர் மீரா குமார் இரங்கல் தீர்மானம் கொண்டுவந்தார்.

அந்த தீர்மானத்தில், 'கடந்த ஆண்டு இதே நாளில் வெல்ல முடியாத துணிவுடன் தீவிரவாதத்தை நசுக்கிய படையினருக்கும், மக்களுக்கும் நாடாளுமன்றம் மரியாதை செலுத்துகிறது என்று கூறப்பட்டு இருந்தது.

தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, மும்பை தாக்குதல் நடந்து ஒரு ஆண்டு முடிந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் உரிய இழப்பீடு வழங்கப்படவில்லை என்று அத்வானி தெரிவித்தார். அது குறித்து அவர் பேசியவை வருமாறு -

மும்பைத் தாக்குதல் நடந்து ஒரு ஆண்டு நிறைவடைந்தும் பலியானவர்களில் ஏராளமான குடும்பத்தினருக்கு இன்னமும் நிவாரண உதவி கிடைக்கவில்லை.

தீவிரவாதத் தாக்குதல்களை முறியடிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கும் அதே வேளையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் விரைவாகச் செயற்பட வேண்டும்.

நிவாரண உதவி வழங்கும் பணிகளை ஒருங்கிணைப்பதற்காகவும் பிரச்சினைகளை களைவதற்காகவும் மத்திய உள்துறை அமைச்சகத்தில் ஒரு அதிகாரி தலைமையில் சிறப்பு பிரிவை உருவாக்க வேண்டும் - என்றார்.

அப்போது, பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க் கட்சி எம்.பிக்கள், 'வெட்கம், வெட்கம்' என்று கோஷமிட்டனர். பா.ஜ.க. மூத்த தலைவர் அனந்தகுமார் எழுந்து, இது தொடர்பாக மத்திய அரசு உடனடியாக பதிலளிக்க வேண்டும் - என்றார்.

இதனால், அவை முன்னவரும் நிதி அமைச்சருமான பிரணாப் முகர்ஜி கடுமையாக ஆத்திரம் அடைந்தார். மிகவும் கோபமாக, மும்பை தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்க வேண்டாம். ஏற்கனவே, அதை அரசியலாக்கியதால் விளைந்த பலனை (தேர்தல் தோல்வி) நீங்கள் (பா.ஜ.க.) அனுபவித்து வருகிறீர்கள். மீண்டும் அதே பலன் உங்களுக்குக் கிடைக்கப் போகிறது. ஒவ்வொரு பிரச்சினைக்கும் மத்திய அரசு பதில் கூறி கொண்டு இருக்க முடியாது எனக் கூறினார்.

அதைத்தொடர்ந்து, பிரணாப் முகர்ஜியுடன் கடும் வாக்குவாதம் நடந்தது. காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. எம்.பிக்களுக்கு இடையே கடுமையான வாக்குவாதம் எழத் தொடங்கியது. அவையில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டன.

# மும்பைத் தாக்குதல் நினைவு தினம் இந்தியா முழுவதும் கண்ணீர் அஞ்சலி

மும்பை, நவ. 28

மும்பைத் தாக்குதல் சம்பவத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இந்தியா முழுவதும் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மும்பையில் தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி, தாக்குதலில் பலியானவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். மும்பையில் கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 195 பேர் கொல்லப்பட்டனர். 250 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இந்தியா முழுவதும் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மும்பையில் பொலிஸார் அணிவகுப்பு நடத்தினர். இதில், மகாராஷ்டிரா தீவிரவாத தடுப்பு படை, போர்ஸ் ஒன் படை மற்றும் அதிரடி படையினர் பங்கேற்றனர். தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர் மும்பைப் பொலிஸாருக்கு வாங்கப்பட்ட நவீன ஆயுதங்கள், கவச வாகனங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களின் அணிவகுப்பும் நடத்தப்பட்டது.

அப்போது வீதியின் இருபுறமும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், தேசியக் கொடி மற்றும் பேனர்களை அசைத்தபடி தீவிரவாதத்தை ஒழிப்போம் என்று கோஷமிட்டனர்.

சி.எஸ்.டி. ரயில் நிலையத்தில் ஆயிரக்கணக்கான பயணிகள் ஒரு நிமிடம் நின்று அஞ்சலி செலுத்தினர். தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட பயணிகள், ஊழியர்களுக்கு ரயில் நிலையத்தில் உள்ள தியாகிகள் நினைவிடத்தில் ரயில்வே படையினர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். ரத்ததான முகாமும் நடத்தினர். நகரின் பல இடங்களில் மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். தாக்குதல் நடந்த இடங்களில் ஒன்றான நாரிமன் ஹவுஸில் பிரார்த்தனை கூட்டம் நடந்தது.

மெரைன் டிரைவ் பொலிஸ் ஜிம்கானாவில் அரபிக்கடலை நோக்கி அமைக்கப்பட்டிருக்கும் தியாகிகள் நினைவுச் சின்னத்தை அசோக் சவான், சகன் புஜ்மால் முன்னிலையில் மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் திறந்து வைத்தார். தாக்குதலில் கடுமையாக சேதமடைந்த தாஜ் ஹோட்டலைக் கடந்து சென்ற சிலர் தீவிரவாதி கசாபை தூக்கிலிடு என கோஷமிட்டனர். தாஜ், டிரைடென்ட் ஹோட்டல்களில் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர்.

இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களின் தலைநகரங்களில் மும்பைத் தாக்குதல் சம்பவத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## இந்தியச் செய்திகள்

# மும்பைத் தாக்குதல் தினத்தை முன்னிட்டு தமிழக களத்தில் ஒரு லட்சம் பொலிஸார்!

## 3 நாள்கள் விழிப்போடு இருக்க உத்தரவு

சென்னை, நவ. 28

மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய தினத்தையொட்டி தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 3 நாள்கள் விழிப்போடு இருக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவு போடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி மும்பையில் தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவம் அகில இந்தியாவையே உலுக்கியது. மும்பையில் தாக்கப்பட்ட தினத்தையொட்டி (நவம்பர் 26) தீவிரவாதிகள் மீண்டும் கடல் வழியாக புகுந்து தாக்குதல் நடத்தலாம் என்றும், எனவே எச்சரிக்கையாக இருக்கும்படி அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய உளவுப்பிரிவுப் பொலிஸார் தகவல் அனுப்பினர்.

குறிப்பாக தமிழகம் உட்பட கடலோர மாநிலங்களில் பொலிஸார் மிகவும் உஷாரோடும், எச்சரிக்கையோடும் இருக்கும்படி மத்திய உளவுப்பிரிவுப் பொலிஸார் அறிக்கை அனுப்பியுள்ளனர். இதனால் நேற்றுமுன்தினம் முந்தினத்தில் இருந்து தமிழகத்தில் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் பொலிஸார் இரவு - பகலாக தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழகத்தில் உள்ள 13 கடலோர மாவட்டங்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# மாவீரர் நாளையொட்டி தமிழகத்தில் அகதி முகாமில் பொலிஸார் குவிப்பு!

மண்டபம், நவ. 28

மாவீரர் தினத்தை முன்னிட்டு மண்டபம் அகதிகள் முகாமில் கியூ பிரிவுப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நவம்பர் 26. ஒவ்வொரு ஆண்டும் இவரது பிறந்த நாளுக்குமறு நாள், மாவீரர் தினத்தில் உரையாற்றுவார்.

இந்நிலையில், மண்டபம் அகதிகள் முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்கள், மாவீரர் தினத்தை கொண்டாடுகின்றனரா என்பதைக் கண்காணிக்க, கியூப் பிரிவுப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தியாகராஜன் தலைமையில் சிறப்புக் குழு, மண்டபம் பகுதிக்கு வந்துள்ளது. மேலும் அகதிகளுக்கென இயங்கும் எஸ்.எல்.ஆர். பொலிஸார், முகாம் முழுவதும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு முயன்ற ஈழத்தமிழர் கைது

## திருச்சியில் பொலிஸார் அதிரடி

திருச்சி, நவ. 28

திருச்சியில் பிரபாகரனின் படம் அச்சிடப்பட்ட சுவரொட்டிகளை ஒட்ட முயன்றனர் என இலங்கைத் தமிழர்கள் 4 பேர் உட்பட 10 பேரை பொலிஸார் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்தனர்.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளையொட்டி, தமிழகம் முழுவதும் பல்வேறு அமைப்பினர் வாழ்த்து சுவரொட்டிகள் ஒட்ட திட்டமிட்டிருக்கின்றனர் என பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, திருச்சி மாநகரப் பகுதியில் புதன்கிழமை இரவு பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது, ஜங்ஷன் ரயில்வே மேம்பாலம் அருகே சுவரொட்டிகளுடன் நின்ற இரண்டு இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் பிடித்து சோதனை செய்தனர்.

அப்போது, பிரபாகரன் படத்துடன் அவரை வாழ்த்தும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் அவர்களிடம் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, அவர்களிடம் நடத்திய விசாரணையில், திருச்சி கே.கே.நகர் அய்யப்பநகரைச் சேர்ந்த நிசந்தன் (வயது - 16), சசிதரன் (22) என தெரிய வந்தது. இருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

இதேபோல, கே.கே. நகரில் பிரபாகரன் படத்துடன் கூடிய சுவரொட்டிகளை ஒட்ட முயன்றனர் என ஜனார்த்தனன், தர்சிகன் ஆகிய இருவரையும் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் நால்வரும் இலங்கைத் தமிழர்கள் ஆவர்.

பாலக்கரை முதலியார் சத்திரத்தில் பிரபாகரன் படம் அச்சிடப்பட்ட சுவரொட்டிகளை ஒட்ட முயன்றனர் என மணி, சோழசூரன், எழில்வேந்தன், பஜீர்தரன், சிவா, விஜயதாஸ் ஆகிய 6 பேரையும் பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் சிலர் நாம் தமிழர்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மூன்று தொன் சந்தனக்கட்டை உடுமலையில் தோண்டி எடுப்பு!

உடுமலை வனப்பகுதியில், தோண்டத் தோண்ட தொன் கணக்கில் சந்தனக் கட்டைகள் சிக்குகின்றன. நேற்று மூன்று தொன் சந்தனக் கட்டைகளை வனத்துறையினர் மீட்டனர்.

திருப்பூர் மாவட்டம், உடுமலை வனச் சரகத்திற்கு உட்பட்ட குழிப்பட்டி, குருமலை, மாவடப்பு, நாரைக்கல் சரகம் ஆகிய பகுதிகளில், 250 சதுர கி.மீ. பரப்பளவில், லட்சக் கணக்கான சந்தன மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ளன. பலனுக்கு தயாராக பல ஆயிரம் மரங்கள் உள்ளன. மரங்கள் முதிர்ச்சியடைந்துள்ள நிலையில், சந்தனக் கட்டைகள் வெட்டி கடத்தும் சம்பவங்கள் அதிகரித்தன.

சந்தன மரங்களை வெட்டி கடத்துவது வனத்துறையினர் என மலை வாழ் மக்களும், அவர்கள்தான் காரணம் என வனத்துறையினரும் மாறி மாறி முறைப்பாடு தெரிவித்து வந்தனர். வனத்துறை மற்றும் பொலிஸார் வாகனச் சோதனையில் அடிக்கடி, சந்தனக்கட்டை கடத்தும் கும்பல், வாகனங்கள் சிக்கி வந்தன.

வனத்துறை உயர் அதிகாரிகள் சந்தனச் சோலையில் ஆய்வு செய்த போது அதிர்ச்சியடைந்தனர். 559 சந்தன மரங்கள் வெட்டப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. இதையடுத்து, வனத்துறை அதிகாரிகள் இடமாற்றம், அதிரடிப்படை பாதுகாப்பு, வனத்துறை அமைச்சர் ஆய்வு என அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்தன. ஆய்வில் ஒக்ரோபர் 25ஆம் திகதி, 620 கிலோ சந்தனக் கட்டைகளும், 28 ஆம் திகதி, 3,910 கிலோ சந்தனக் கட்டைகளும், 29இல், 110 கிலோ சந்தனக் கட்டைகளும், 30ஆம் திகதி, 2,701 கிலோ சந்தனக் கட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

நவம்பர் 2ஆம் திகதி, கடத்தல் கும்பலால் வெட்டி கடத்துவதற்காக, வனப்பகுதியில் உள்ள புதரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5,430 கிலோ சந்தனக் கட்டைகளை வனத்துறையினர் கண்டு பிடித்தனர்.

சந்தனக்கட்டை கடத்தும் கும்பலால், வனப்பகுதியில் வெட்டி, கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 12.77 தொன் சந்தனக் கட்டைகள் சிக்கின. மூன்றாண்டில், 35 தொன் சந்தனக் கட்டைகளை வனத்துறையினர் மீட்டுள்ளனர்.

மேலும், வனப்பகுதி முழுவதும் சந்தனக் கட்டைகள் வெட்டி, கடத்துவதற்காக பதுக்கப்பட்டிருக்கும் வாய்ப்புள்ளது என்பதால், தலா 10 பேர் கொண்ட 10 இற்கும் மேற்பட்ட குழுவினர், 250 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள வனப்பகுதி முழுவதும் தேடி வருகின்றனர்.

# 50 பேரை விரட்டிக் கடித்த குதிரை மக்களால் அடித்துப் படுகொலை

ஈரோடு மாவட்டம், கோபி பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் வெறிபிடித்த நிலையில் திரிந்த பெண் குதிரை திடீரென மக்களை விரட்டிக் கடித்தது. பலர் காயமடைந்தனர். மக்கள் அலறி ஓடினர்.

அங்கும் இங்கும் ஓடிய குதிரை அப்பகுதியில் இருந்த பூக்கடைகளை சேதப்படுத்தியது. இதனால் ஆத்திரமடைந்த கடைக்காரர்களும், அப்பகுதியில் இருந்தவர்களும் தடி, கற்களால் குதிரையை விரட்டினர்.

பஸ்நிலையத்தில் இருந்து வெளியேறிய குதிரை வீதியில் [illegible] யும், சைக்கிளில் [illegible] விரட்டி கடித்தது. இதில் சுமார் 50 பேர் வரை காயமடைந்தனர். அப்போது சில ஓட்டோச் சாரதிகள் நீண்ட கயிறுகளை எடுத்து வந்து குதிரையின் கழுத்து கால்களில் கயிற்றை வீசி குதிரையை கீழே சாய்த்தனர். பின்னர், எல்லோரும் தடிகளால் சரமாரியாக குதிரையை அடித்தனர். இதில் குதிரை இறந்தது. இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

குடியிருப்புப் பகுதிகளில் விலங்குகள் புகுந்து அட்டகாசம் செய்யும்போது, வனத் துறைக்கு தகவல் கொடுப்பதே வழக்கம். புளுகிராஸ் அமைப்புகளுக்கு தொடர்பு கொண்டால் கூட, அவர்களே பொலிஸா[illegible]க்கும் தகவல் கொடுத்து வரவழைப்பார்கள். அப்படி செய்யாமல் மக்கள் குதிரையை அடித்துக் கொன்றதை பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு ஆர்வம் உண்டா?



வடமராட்சியில் பிரதேச செய்தியாளர்கள் பின்வரும் இடங்களில் தேவை

- பருத்தித்துறை
- உடுப்பிட்டி
- வல்வெட்டித்துறை
- அல்வாய்
- தொண்டைமானாறு
- துன்னாலை
- தும்பளை
- குடத்தனை

உதயனின் பிரதேச செய்தியாளர்களாகப் பணிபுரிய அரிய சந்தர்ப்பம்

உங்களிடம் பின்வரும் தகுதிகள் இருப்பதாகக் கருதினால் உங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை நெல்லியடியில் உள்ள உதயன் உப பணிமனையில் 07.12.2009 இற்கு முன்னர் ஒப்படைக்கவும்.

- 21 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- நாட்டு நடப்புக்களைக் கண்டறிவதில் நாட்டம் உள்ளவர்கள்
- ஜி.சி.ஈ.உயர்தரத்தில் சித்தி அடைந்திருப்பது விரும்பத்தக்கது
- தமிழ் மொழியில் சரளமாக எழுதும் ஆற்றல் தேவை



# பூமரங்களின் கண்காட்சி

சைபிறஸ், ஒட்டு றோஸ், ஒட்டுச் செவ்வரத்தை, மொசந்தாஸ், ஐந்தூரியம், என்பன பூக்களுடன் விற்பனைக்குண்டு மற்றும் ஒட்டுத் தேசி, ஒட்டு மாங்கன்று, ஒட்டுப்பலா, தென்னை, ஒட்டுத்தோடை, 1கிலோ கொய்யா, பலா, மாதுளை, மற்றும் பல பயன்தரு மரங்களும் ஒரே கூரையின் கீழ்.

**பவிசாறு பூங்கனிச்சோலை**

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி

தொ.இ:0212228199

(சி/562769)


## பரிசளிப்பு விழா

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய ஆணையாளர் திரு.ப. சிவ லிங்கம் கலந்து கொள்வார்.

# மரண அறிவித்தல்கள்

## இராசையா மகேஸ்வரன்



தாவடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கலைமணி வீதி, கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகேஸ்வரன் (வவா - தேனு தேநீர்ச்சாலை உரிமையாளர், கல்வியங்காடு) 26.11.2009 அன்று அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் தாவடி, கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா - நல்லம்மா தம்பதிகளின் புதல்வரும், கலைமணி வீதி, கட்டைப்பிராயைச் சேர்ந்த அமரர் ஸ்ரீனிவாசகம் மற்றும் சகுந்தலாதேவியின் அருமை மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், நிமலன் (உதவிப் பொறியியலாளர், மீளெழுச்சித் திட்டம், செயலகம், திருமலை), துவாரகா, தனேசன் (யா/மத்திய கல்லூரி, 2009 A/L, கணிதப் பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி. பாக்கியலட்சுமி, பரமேஸ்வரன் (கனடா), இராஜேஸ்வரன் (கருடா தேநீர்ச்சாலை, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம்), விக்கினேஸ்வரன் (கனடா), கமலேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), இந்திரேஸ்வரன் (லக்ஷிகா ரெக்ஸ், இல.51, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம்), ஈஸ்வரன் (கனடா), திருமதி பாலேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நடராஜா (நடராஜா அன் கோ, திருநெல்வேலி சந்தி) மற்றும் ஜெயந்தி (கனடா), கோமதிதேவி, லீலாவதி (கனடா), தயா (கனடா), ரஞ்சனி, சுகந்தி(கனடா), ஆனந்தசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், கிருஸ்ண தாசன், உலகநாதன் (ஜேர்மன்), சுபாசினி (சுவிஸ்) ஆகியோரின் ஆசை மைத்துனரும், ஞானமலர், நந்தா (ஜேர்மன்), சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29-11-2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கலைமணி வீதி,
கட்டைப்பிராய். (92610)

## சிவமயம் இலட்சுமிபிள்ளை



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவமயம் இலட்சுமிபிள்ளை நேற்று (27.11.2009) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் கந்தசாமி சிவமயத்தின் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) மனைவியும், அமரர் தர்மலிங்கம்- சின்னம்மாவின் அன்பு மகளும், அமரர்களான கந்தசாமி-சின்னம்மாவின் அன்பு மருமகளும், தயாளினி, சுதர்சினி (பின்லாண்ட்), மோதிலால் (இ.போ.ச - காரைநகர் சாலை) ஆகியோரின் அன்புத்தாயும், தயாளலிங்கன், ஜெபநேசன் (பின்லாண்ட்), றஜிதகௌரி (தாதியர், யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமியும், பொன்னுத்துரை செல்லம்மா, ஆறுமுகசாமி, சற்குணசிங்கம் சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற குடும்பநல மேற்பார்வையாளர்), பரமசிவம் (கீர்த்தா அச்சகம், சங்கானை) ஆகியோரின் சகோதரியும், மிதுசனா, வர்சனா,பிரவீன், கஜனா, சிவகஜனி, துளசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி.மோதிலால்(மகன்)

'குமரகிரி'
பண்ணாகம் ,சுழிபுரம். (92608)


# Nottingham College Of London And UNI ICT - Campus

கணனி நிறுவனங்கள்

## யாழ் மாணவர்களுக்கு வழங்கும் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2010

எமது யாழ் மாவட்ட மாணவர்களது கணனி, ஆங்கிலம், முகாமைத்துவம், மருத்துவம் போன்ற துறைகளின் அறிவை வளர்க்கும் நோக்குடன் கீழ்வரும் சர்வதேச கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு எமது நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. அந்த வகையில் கீழ்வரும் கற்கை நெறிகளை நீங்கள் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றின் மூலம் எமது நிறுவனத்தில் இலகுவாக கற்கமுடியும். இத்திட்டத்தின் மூலம் ஒருவர் மூன்று கற்கை நெறிகளை தெரிவு செய்து கற்க முடியும்.

### Certificate Courses :-

- Certificate in Information Technology
- Certificate in PC Hardware Engineering
- Microsoft Office for Business Professional
- Certificate in PC Network Administration
- Certificate in English
- Certificate In Business & Communication

### Diploma Courses :-

- Diploma in Marketing
- Diploma in Human Resource Management
- Diploma in Electronic Technology
- Diploma in Multimedia
- Diploma in IT (One Year)
- Diploma in Hardware Engineering
- Diploma in Business (With Accounting & IT)
- Diploma in Business Technology
- Professional Diploma in Marketing
- Diploma in Spoken & Practical English & IELTS

### Higher National Diploma

- Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy)

### Degree Courses :-

- B .A (Hons) in Business Administration
- B.Sc (Hons) in Multimedia

- Conditions for Apply -

ஆர்வமுள்ள அனைவரும் எமது இத்திட்டத்தில் பங்குபற்றலாம்!!!

எமது இத் திட்டத்தில் இணைய நீங்கள் செய்ய வேண்டியவை?????

- எமது இப்புலமைப்பரிசிலானது பொது அறிவு மற்றும் நுண் அறிவு பரீட்சைகளை கொண்டதாகும்.
- நீங்கள் பெறும் புள்ளிகளின் ஊடாக எம்மால் உங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இன்றே கீழ்வரும் எமது முகவரிக்கு உங்களது முழுப்பெயர், வீட்டு முகவரி, நீங்கள் கற்க விரும்பும் எமது கற்கைநெறியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை தெளிவாக எழுதி கீழே தரப்பட்டுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும். அல்லது மேற்படி உங்கள் விபரங்களை உங்களது கைத்தொலைபேசியில் ரைப்செய்து 0777 - 110 862 என்னும் எமது தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்!!!!! இவ்வாறு அனுப்பிவைக்கும் மாணவர்களுக்கு நாம் இலவசமாக எமது விண்ணப்படிவங்கள், எமது கற்கை நெறிகள் பற்றிய விபரம் மற்றும் எமது புலமைப்பரிசில் நடைபெறும் திகதி ஆகியவற்றை தபாலில் அனுப்பிவைப்போம்.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 10/12/2009

Our International Universities Affiliations:-
eie | Unitec | University of Wales, Newport

அனுப்ப வேண்டிய முகவரி :- UNI & NOTTINGHAM COLLEGE OF LONDON ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862



# After A/L Result! What Next?

## BIT - University of Colombo

- கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மிக உயர் தேர்ச்சி உடைய வெளிவாரிக்கற்கை நெறி.
- A/L இல் மூன்றுபாடங்ளில் சித்தியடைந்தோர் (BIO,Maths,Arts,Commerce) நேரடியாகவும்.
- A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் கற்கை நெறியைத் தொடரமுடியும்.
- 1ம் ஆண்டின் முடிவில் DITம், 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.
- கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் வெளிவாரியாக பயில முடியும்.
- கற்கை நெறியை பகுதியாக பூர்த்தி செய்தோர் லண்டன், அமெரிக்கா பல்கலைக் கழகங்களில் மிகுதிக் கற்கை நெறியை பூர்த்தி செய்ய முடியும்.
- முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
- பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம் 3 ஆண்டுகளுக்கும் 90,000 ரூபா மட்டுமே.

## Computer Engineer - Microsoft

- மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் கணனிப் பொறியியலாளர் கற்கை நெறி.
- Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்புக்கள்
- Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
- Routers & Servers மூலம் முழுமையான செயன்முறைப் பயிற்சி
- இலங்கை அரசாங்கம் ICTA ஊடாக வழங்கும் புலமைப்பரிசில்
- USA, Canada, Australia, Singapure நாடுகளில் Microsoft Tech இன் MSc கற்கைநெறி

## CIMA - UK

- வணிகமுகாமைத்துவ துறையில் சர்வதேசரீதியில் உயர் தகமைக் கற்கை நெறி.
- ஆற்றல் நிறைந்த யாழ் (MCS) - கொழும்பு ( Imperial college) விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த கற்பித்தல்

- ஐநா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
- BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
- BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாடடிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
- ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM ,CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்.

**Mobile@net Computer Services**

324, Palaly Road, Jaffna - Sri Lanka
பரமேஸ்வராச்சந்தி அருகே
Bus Route 764
Phone: 0772395895, 0718475501
web: www.mcsitcampus.org

MCS Supported By UNDP/JRRP


## சேவை நலன் பாராட்டு விழா

வண்ணை, நவ,28.

யாழ். கோட்ட அதிபர்கள் சங்கம் நடத்தும் சேவை நலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலய வளாகத்தில் அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ.சி. மாணிக்கராசா மற்றும் யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலய அதிபர் சத்தியபாலன் ஆகியோர் பாராட்டைப் பெறவுள்ளனர்.

யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன், வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபர் சு.சிவபாதசுந்தரம், கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் சி.சோமசேகரம் மற்றும் யாழ்.கன்னியர் மட வித்தியாலய அதிபர் அருட்செல்வி நேவில் [illegible] வழங்கவுள்ளனர். (ஓ-160)


# பானை முறையிலான வடிகலன் தொகுதியைத் திருத்தம் செய்தல்

எமது வரணி வடிசாலையில் உள்ள பானை முறையிலான வடிகலன் தொகுதியை 2010 ஆம் ஆண்டில் முழுமையாக தொழிற்படுத்துவதற்காக இத்துறை சார்ந்த தொழில்நுட்பவியலாளர் மூலம் அதனைத் திருத்தம் செய்யவுள்ளோம். செய்ய வேண்டிய திருத்தத்தினை பரீட்சித்து திருத்தத்திற்கான உத்தேச செலவு மதிப்பீட்டை குறிப்பிட்டு தலைவர், தென்மராட்சி ப.தெ.வ. அ.கூ. சங்கங்களின் கொத்தணி, வரணி என்ற முகவரிக்கு 15.11.2009 ஆம் திகதிக்கு முன்னர் மூடி ஒட்டிய நிலையில் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இத் திகதி 15.12.2009 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

இக்கூறுவிலை அனைத்தும் எமது நெறியாளர் குழுவிற்குச் சமர்ப்பித்து இறுதிமுடிவு அவர்களால் மேற்கொள்ளப்பட்டு தங்களுக்கு அறிவிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்.

(சி/562768)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெறவுள்ள மாணவர்ளுக்கு பீடாதிபதியின் ஆலோசனை

## கலாசார சீரழிவுகளுக்கு இடம்கொடாதீர் என்றும் அறிவுரை

யாழ்ப்பாணம்.நவ.28

மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெறவுள்ள மாணவர்கள், அவர்களின் பெற்றோர்களுக்கு மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.சிவபாலன் சில ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது:-

மருத்துவ பீட அனுமதி பெற்றுவரும் மாணவருக்கு முதல் இரு மாதங்களும் ஆங்கிலம், கணனிப் பாவனை மற்றும் ஆளுமை விருத்தி என்ப'வைகளே கற்பிக்கப்படுகின்றன. மேலும் முதுநிலை மாணவருடன் அறிமுகமாவதற்கு மாலை வேளையில் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. உடலமைப்பியல், உடற்றொழியியல் மற்றும் உயிரிரசாயனவியல் போன்ற பாடங்கள் செயல் முறை விளக்கங்களுடன் முறையாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

எனவே பல்கலைக்கழக அனுமதிக்கு முன்னரான கற்றல் என காலத்தை வீணாக்குவதை விட்டு, ஆங்கிலப் பாவனை, கணனி பாவனை போன்றவற்றைக் கற்பதுடன் ஆளுமை விருத்தி மற்றும் பொது அறிவு விருத்தி போன்றவற்றில் ஈடுபடுவதே புதுமுக மாணவருக்கு நன்மை பயக்கும். மருத்துவ நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் முதுநிலை மாணவரை மகிழ்விப்பதற்குப் பதிலாக அண்மையிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று நோயாளர் பராமரிப்பில் இயன்ற உதவிகளைச் செய்து மருத்துவ தொழிலின் இயல்பை அறிந்து கொள்வது நன்று.

உதவ வருகிறோம் எனக்கூறி புகுமுக மாணவரைத் தேடிவரும் முதுநிலை மாணவரிடம் முதலில் அவரது பல்கலைக்கழக அறிமுக அட்டையைக் கேட்டுப் பெற்று அதிலுள்ள பெயரையும் பதிவு இலக்கத்தையும் குறித்து வைக்கவும். ஏதாவது விரும்பத்தகாத செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டால் எவ்வித தயக்கமுமின்றி சமூக ரீதியாகவோ காவல் துறை மூலமாகவோ தகுந்த நடவடிக்கை எடுப்பது உங்கள் கடமை ஆகும்.

**மருத்துவ மாணவ ஒன்றியம் உத்தரவாதம்**

பல்கலைக்கழகத்துக்கு வெளியே புகுமுக மாணவருக்கு எவ்வித சங்கடங்களையும் மருத்துவ முதுநிலை மாணவர் ஏற்படுத்த மாட்டார்கள் என மருத்துவ மாணவ ஒன்றியம் உத்தரவாதம் வழங்கியுள்ளது.

கற்றலுக்கு வழிகாட்டுகின்றோம் எனக் கூறிக் கொண்டு தாம் எழுதிப் படிக்க வேண்டிய குறிப்புக்களை புகுமுக மாணவரைக்கொண்டு எழுதுவிக்க முயலும் முதுநிலை மாணவரையும் அப்பாவிகளான புகுமுக மாணவரின் அறியாமையைப் பயன்படுத்தி தமது தேநீர், ஐஸ்கிறீம் இன்னும் பல தேவைகளை நிறைவேற்றும் முதுநிலை மாணவரையும் எக்காரணம் கொண்டும் புகுமுக மாணவரோ அவரது பெற்றோரோ எவ்விதத்திலும் மகிழ்விக்கத் தேவையில்லை. நாகரிகம் மற்றும் பல்கலைக்கழக பாரம்பரியம் எனும் போர்வையில் கலாசார சீரழிவுகளில் புகுமுக மாணவரை வலுக்கட்டாயமாக ஈடுபடுத்த யாராவது முயன்றால் தயங்காமல் பதில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புதுமுக மாணவருக்கு முதுநிலை மாணவரால் தொந்தரவு ஏற்படுத்துவது பல்கலைக்கழக அனுமதி பெற்று உள்ளே வந்தபின்னரே எனப்பலரும் கருதியிந்தோம். மருத்துவ பீடத்தில் அதுவும் இல்லை எனக்கருதியிருந்தோம். எதிர்பாராத சில சந்திப்புக்களின் போது அரசல் புரசல்களாகக் கிடைத்த சில தகவல்கள் எமக்கு கவலையளிப்பதாக உள்ளன. முகம்தெரியாத சிலர் ஒவ்வாத செயலூக்கம் கொண்ட முதுநிலை மாணவர் பற்றியும், முதுநிலை மாணவர் போன்று பாவனை செய்து தமது விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுவோர் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்தக் குறிப்பு பத்திரிகைக்கு அனுப்ப நேரிட்டுள்ளது. மருத்துவத்தின் மேன்மையையும் ஒழுக்க சீலத்தையும் மதித்து நடக்கும் எண்ணிக்கையான மருத்துவ மாணவருக்கு ஒரு சிலரால் அபகீர்த்தி ஏற்படுவதாக கவலை கொள்கின்றோம்.

மிகுந்த சிரமங்கள் மத்தியில் சிறப்பாக கற்று உன்னதமான மருத்துவக் கற்கைக்குத் தெரிவாகும் மாணவர் மேலும் கடினமான கற்கைக்குத் தம்மைத் தயார்ப்படுத்தும் இடைவேளையை மகிழ்வுடனும் பயனுடனும் கழிக்கும் அதேவேளை அவர்களது மருத்துவ பீடப் பிரவேசம் மகிழ்வானதாகவும் அழுத்தமற்றதாகவும் அமையவேண்டும்- என்றுள்ளது. (ஓ)

## இராமாவில் நலன்புரி நிலைய மாணவரின் அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,நவ.28

இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த வேளையில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்த மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அலுவலக நேரத்தில் எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலைக்கு வந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் பே. கஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஓ-1)

## நாகேஸ்வரத்தில் புதனன்று தீப பூசை

வண்ணை- நவ.28

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை விஸ்ணு ஆலய தீபபூசை மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.

காலை 8 மணிக்கு ஸ்ரீமத் நாராயணருக்கு விசேட அபிஷேக ஆராதனையும் பூசையும் நடைபெறும். 9 மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நிறைவில் ஸ்ரீமத் நாராயணர், பூமாதேவி, ஸ்ரீதேவி சகிதம் நாராயணர் திருவீதியுலா வருவார். (ஓ-207)

## இலவசமாக 24 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் மட்டுவில் தெற்குப் பிரிவு மக்களுக்கான இலவச நீரிழிவு மற்றும் கண் பரிசோதனை முகாம் அண்மையில் மட்டுவில் தெற்கு வளர்மதி சன சமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

கண் பரிசோதனையில் கலந்து கொண்டு பார்வையில் குறைபாடு காணப்பட்ட 24 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.(ஓ-207)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையின் அனுமதி அட்டைகள் இன்று வந்துசேரும்

யாழ்ப்பாணம்,நவ.28

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளன.

கொழும்பு சென்றிருந்த யாழ்ப்பாணம், வலிகாகம் கல்வி வலயங்களின் அதிகாரிகள் இந்த அனுமதி அட்டைகளை எடுத்து வரு கின்றனர்.

பாடசாலைகளுக்கான அனுமதி அட்டைகள் அதிபர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்றும் தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பபிவைக்கப்படும் என்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-1)

## எல்லோருக்கும் கௌரவமான சமாதானம் கிடைக்கட்டும் ஜனாதிபதி - ஹஜ் பெருநாள் வாழ்த்து

கொழும்பு, நவ.28

இந்த நாளில் முஸ்லிம்கள் தமது விசேட சமயக் கிரியைகளின்போது கேட்கின்ற பிரார்த்தனையில் எம் எல்லோருக்கும் கௌரவமான சமாதானம் கிடைப்பதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு மகிழ்ச்சியும் சமாதானமும் மிக்க நன்னாளாக இருக்க எனது நல்வாழ்த்துக்கள் ; என்று ஜனாதிபதி தமது ஹஜ் பெருநாள் வாழ்த்தில் தெரிவித்திருக்கிறார்.

அச்செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஹஜ் யாத்திரையையும் தியாகத்தையும் நினைவூட்டும் இப்பெருநாள் உலக முஸ்லிம்களின் மிகப்பெரிய வருடாந்த நிகழ்வாகக் காணப்படுகின்றது. இன்றைய நாளில் இலங்கையிலிருந்து சுமார் ஐயாயிரம் பேர் உட்பட சுமார் நான்கு மில்லியன் முஸ்லிம்கள் புனித மக்கா நகரில் ஒன்றுகூடி ஹஜ் கடமையை நிறைவேற்றுகின்றனர்.

இலங்கை முஸ்லிம்கள் எமது நாட்டின் முன்னேற்றத்திற்கும் எமது மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளனர். அவர்கள் வரலாறு நெடுகிலும் எமது நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களோடு ஐக்கியத்துடனும் நட்புறவுடனும் வாழ்ந்து வந்துள்ளதுடன் அதனைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தும் வருகின்றனர்.

மூன்று தசாப்த காலப் பயங்கரவாதம் முற்றுப்பெற்றுள்ள இச்சூழ்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புகளோடு அச்சமின்றி வாழுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் துரித மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் காரணமாக வடமாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி சமாதானம், சுபீட்சம் நிறைந்த புதிய வாழ்க்கையை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## பரீட்சைப் பெறுபேறு உத்தியோக பூர்வமாக இன்று வெளியாகும்

யாழ்ப்பாணம், நவ.28

யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் பெறுபேறுகள் இன்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் கல்வித் திணைக்களத்தினரால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும்.

கொழும்பு சென்றிருந்த யாழ்.கல்விவலயப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி ஆகிய வலயங்களின் பெறுபேறுகளையும்-

வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் வலிகாமம்,வடமராட்சி கல்விவலயங்களின் பெறுபேறுகளையும்- எடுத்துவருகின்றனர். (ஓ - 1)

## தென்மராட்சியில் 286 வீடுகளை நிர்மாணிக்க முடிவு

யாழ்ப்பாணம், நவ.28

தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இவ்வருடம் 286 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இப்பிரதேசத்தில் உள்ள ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளில் வீடமைப்புத் திட்டம் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீசாலை வடக்கு,இராமாவில், மண்டுவில், நுணாவில் மேற்கு, மட்டுவில் தெற்கு, நாவற்குளி மேற்கு, சரசாலை வடக்கு, சாவகச்சேரி வடக்கு, நுணாவில் கிழக்கு ஆகிய ஒன்பது கிராமங்களில் இந்த 286 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-207)

## இன்று ஒளிவிழா

அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையின் சாவகச்சேரி தூய தோம்ஸ் முன்பள்ளிச் சிறார்களின் ஒளிவிழா நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை முன்பள்ளிகள் மற்றும் பாலர் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் இயக்குநர் வண.ஜே.என் அன்ரனியும், சிறப்புவிருந்தினர்களாக யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன், மற்றும் வண.பி.ஜே.சூரியகுமார் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஓ-207)

## மெலிஞ்சிமுனைப் பகுதிக்கு விரைவில் மின் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 28

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைப் பகுதிக்கு விரைவில் மின்விநியோகம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பகுதிக்கான மின்விநியோகத்தினை ஆரம்பிக்கும் பொருட்டு முதற்கட்டமாக 'கேபிள்கள்' இணைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.(50-224)

## அருட்கவியின் பாடல்களில் கண்ணன் ஒளிர்ந்திருப்பான்!



அருட்கவியரசு சி.விநாசித்தம்பிப் புலவர் எங்கள் குடும்பத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவர். அடியேனுடைய இளவல் அமரர் நா.அருமைநாயகம் தனக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும்போது, நாவலப்பிட்டியிலிருந்து அளவெட்டிக்கு வந்து அருட்கவி அரசு அவர்களைச் சந்தித்து ஆறுதல் பெற்றுக் கொண்டு வருவார்.

பண்டிதமணி அவர்களிடம் அடியேன் அடிக்கடி செல்வதுண்டு. ஒருமுறை அருட்கவி அரசு அவர்களைப் பற்றிய பேச்சு வந்தபோது:-

''அளவெட்டி விநாசித்தம்பியரிடம் ஒரு சக்தி இருக்குதுகாணும். ஆனால் அது எவ்விதமானது என்றுதான் என்னால் கூறமுடியவில்லை'' என்றார்கள்.

நாங்கள் இருவருமே பண்டிதமணி அவர்களுடைய மாணவர்கள்தான்.அருட்கவி என்றாலும் வரகவி என்றாலும் ஒரு பொருட் சொற்கள்தாம்.

இவருடைய பாடல்கள் பலவற்றை அடியேன் விருப்பத்து டன் படித்ததுண்டு; படிப்பதுண்டு. எல்லோ ரும் இலகுவில் பொருள் விளங்கிக்கொள்ளும் ஜனரஞ்சகமான பாடலாய் அமைந்திருப்பதோடு பக்திச்சுவை சொட்டும் பாடல்களாயும் அமைந்த வையாகும். வீடு தோறும் இவரது ஒவ்வொரு புத்தகம் இருப்பின் அதனுள்ளே கண்ணன் இருப் பதை யாரும் உணரலாம். அருட்கவியின் பாடல்களில்/கண்ணன் ஒளிர்ந்திருப்பான்

- ஆத்மஜோதி நா.முத்தையா

(அருட்கவியின் நான்காவது குருபூசைத் தினம் இன்றாகும்)

## ஆலயங்களிலிருந்து இரவோடு இரவாக மாயமாக மறையும் பித்தளைப் பொருள்கள்

சண்டிலிப்பாய், நவ. 28

குடாநாட்டில் பழைய இரும்பு, பித்தளை போன்ற பொருள்கள் அதிக விலை போவதால் ஆலயங்களில் வைக்கப்பட்டிருந்த குத்து விளக்கு, மணி, பஞ்சாலாத்தி போன்ற பித்தளை பொருள்கள் இரவோடு இரவாக மாயமாக மறைகின்றன. இது குறித்து மக்கள் கவலையும் அதிர்ச்சியு மடைந்துள்ளார்கள்.

சுதுமலை அம்மன் ஆலயத்தோடு இணைந்திருக்கும் வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த 5 மணிகளில் 3 மணிகள், பஞ்சலாத்தி, ஒற் றைத் தீபம் ஆகியன மாயமாக மறைந்துள்ளன.

இதே போல் அருகிலுள்ள சிவன் கோவிலில் இருக்கும் தட்சணா மூர்த்தி விக்கிரகத்துடன் வைக்கப்பட்டிருந்த குத்துவிளக்கும் மாயமாக மறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தில் நடைபெற்ற இந்த திருட்டுகள் குறித்து அடியார்கள் கவலையடைந்துள்ளார்கள். (50-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. விளம்பர நிறுவனத்தின் மூலம் மஹிந்தவின் தேர்தல் பிரசாரம்

கொழும்பு, நவ. 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் வேலைக்ள் அமெரிக்காவிலுள்ள விளம்பர நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கப்பட உள்ளன என்று அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தேர்தல் பணிகளுக்குப் பெரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ள அமெரிக்க விளம்பர நிறுவனம் ஒன்றே இப்பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் சாலிய விக்கிரமசூரிய அரசின் சார்பில் இந்நிறுவனத்துடன் ஆரம்ப கட்டப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளார் என்றும் இந்நிலையில் குறித்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் அடுத்த வாரம் இலங்கை வர உள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

## ஏ.ஐ.எம்.ரக யுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது என்றுதெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் 2 விமானிகளும், விமானப்படை கொமாண்டோக்கள் இருவருமாக நால்வர் பலியாகினர். உயிரிழந்த நால்வரின் சடலங்களும் நேற்று மாலை மீட்கப்பட்டதாக விமானப்படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வீரவல விமானப்படை முகாமிலிருந்து பயிற்சி நடவடிக்கைக்காக இந்த ஹெலிகொப்டர் பயன்படுத்தப்பட்டள்ளது. (அ)

## மீள்குடியேற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் மீள்குடியமர்த்தப்படுவார்கள்.

தற்போது மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 158 பேரும், மன்னாரில் 970 பேரும் மற்றும் யாழ்ப்பாணத்தில் 738 பேரும் எஞ்சியுள்ளனர்.

இதேவேளை மாந்தை கிழக்கில் நேற்று 800 பேர் மீளக் குடியமர்தப்பட்டுள்ளனர் - என்றார்.

## ஜனவரி 26 இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமீபத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவுக்கு உத்தரவிட்டிருந்தார். இதற்கமையவே ஜனவரி 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்தல் நடைபெறும் என்று தயானந்த திஸாநாயக்கா நேற்று அறிவித்திருக்கிறார்,

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராகத் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவும் போட்டியிடவிருக்கின்றமை தெரிந்ததே. அத்துடன் இடதுசாரி முன்னணித்தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவும் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளார்.

இதேவேளை - வடக்கு - கிழக்குத் தமிழர் தரப்பு குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிக்கும் என்ற எதிர்பார்ப்புக்கு இன்னமும் விடை கிடைக்காத நிலையில், தமிழர் தரப்பில் வேட்பாளர்ஒருவரைநிறுத்துவது தொடர்பாகவும் சில வட்டாரங்களில் ஆராயப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடமும் வேறு சில தமிழ்த் தரப்புகளும் இணைந்து இது தொடர்பாகப் பரிசீலித்து வருகின்றன என்று தெரியவந்தது. எனினும், இது தொடர்பாக நேற்று மாலைவரை தமிழர் தரப்பிலிருந்து எந்தவொரு முடிவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. (அ-சி)

## முஸ்லிம்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹஜ் பெருநாளை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அவர்களது பகுதிகளில் மீண்டும் மீளக் குடியேறத்தக்க சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இதனை நிறைவேற்றுவதற்காக நான் பாடுபடுவேன் என உறுதியளிக்கிறேன்.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம்கள் தற்போது மதத்தை சுதந்திரமாக பின்பற்றுவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டமைக்கு நானே காரணம் -என தெரிவித்துள்ளார்.

## நிறைவேற்றதிகார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையில் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பொதுவேட்பாளராக முன்னாள் இராணுவத் தளபதியைத் தெரிவு செய்து தவறான அரசியல் தீர்மானம் ஒன்றை எதிர்க்கட்சிகள் எடுத்துள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் சரத் பொன்சேகா நடவடிக்கைகளை மேற்கொண்டமை தொடர்பில் அவரை நான் மதிக்கிறேன். ஆனால் சரத் பொன்சேகா அறியாத சூழ்ச்சி ஒன்றில் சிக்கியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதையே அக்கட்சிகள் முன்வைத்துள்ளனர். இந்த முறைமை இல்லாது ஒழிக்கப்பட்டிருந்தால் நந்திக்கடலில் இன்றும் பிரபாகரன் படகோட்டியிருப்பார். - என்றார்.

(அ-சி)

## பாதுகாப்புக்குப்...

(முதலாம பக்கத் தொடர்ச்சி)

ஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. கனடாவில் இருக்கும் இலங்கைத் தூதரகம் கனேடிய அரசுக்குக் கொடுத்த அழுத் தம் காரணமாகவே சீமான் அழைத்துச் செல்லப்பட்டார் எனவும், மாவீரர்தினத்தில் சீமான் ஆற்ற இருந்த உரையை தடுப்பதுவே சீமான் அழைத்துச் செல்லப்பட்டமைக்கான பிரதான காரணம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

## பொன்சேகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணை நடத்துமாறு அரசு திடீர் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அமெரிக்காவின் ஒக்லோஹமா மாநிலத்தில் அமைந்துள்ள 'ஹிகோர்ப்' நிறுவனம் முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகாவின் மருமகனான (மகளின் கணவர்) தனுஸ திலகரட்ணவின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், பொன்சேகாவுக்கு வலைவிரிப்பதற்காக இவ்வாறான ஒரு விசாரணைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் அரசு உத்தரவிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)


### பிற்போடப்பட்டுள்ளது

நாளை(29.11.2009)ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த கட்டைப்பிராய் கலைமணி சன சமூக நிலைய மணிவிழாவும், மலர் வெளியீடும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலைமணி, சன சமூக நிலையம். சு.திவ்யநேசன் செயலாளர்.



### "கணித பாட கருத்தரங்கு"

TARA INFO TECH
Hensman Road,Chavakachcheri

தென்மராட்சி பிரதேச க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை தயார்ப்படுத்தும் முகமாக

இலவச கணித பாட கருத்தரங்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இம்மாதம் 28,29 (இன்றும் நாளையும்) காலை 9.00 மணிமுதல் 12.30 மணிவரை நடைபெற இருப்பதனால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

TARA INFO TECH
Hensman Road,
Chavakachcheri,
Tel.021-5102600,0773784186.

(92514)



### மீள்பார்ட்சாத்திகளுக்கான PAPER CLASS

PHY: M. கருணாநிதி (3.00)
CHE: N. வாகீசன் (4.00)
BIO: R. குகானந்தன்
MATH : K. சயந்தன்

ஆரம்பம் : 30.11.2009

NEW EDUCATION WORLD
ஆனைப்பந்தி (குருகுலம் அருகில்)

குறிப்பு: விடைத்தாள் மதிப்பீட்டில் பங்குபற்றும் ஆசிரியர் குழாம்

(92607)



குறுகிய காலத்தில் புதிய வரலாறு படைத்த NEC இன்

### A/L DAY CLASS

கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 30.11.2009 காலை 8 a.m
★ வழமையான முன்னணி ஆசிரியர் குழாம்
அனுமதிகள் இன்று முதல்

NEC Clock Tower Road, Jaffna
யாழ்.பெருமாள், கோயிலுக்கு அருகில்



### LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

(சி/562626)



### போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

* முகாமைத்துவ உதவியாளர் சேவை
* நுண்கலை பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்தல்
ஆகிய பரீட்சைகளுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்

By: P.கமல்தாசன்.
ஆரம்பம் - 30.11.2009
ஞாயிறு 3.00 P.m.
நாவலர் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.



### SM CONSULTANT SERVICE

148, Temple Road, Jaffna.( யுனிசெவ் முன்பாக)

யாழ். மாணவர்களிற்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன்மதிப்பை பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்!!!

* ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான பிரவேசத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
* விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்புகொண்டு,தேவையான விவரங்களைச் சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!!!
* சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!
* தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.

STUDY IN EUROPE - MBBS/ MD

"LAGANSK STATE MEDICAL UNIVERSITY "(UKRAINE -EAST EUROPE] இல் இணைந்து சிறிலங்கா MEDICAL COUNCIL லினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வரவிரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: 021 222 3818, 0774528818
E.MAIL: MG1404_2009 @YAHOO.COM

இல: 148 கோயில் வீதி யாழ்ப்பாணம். (யுனிசெவ் முன்பாக)



### ICE LAND ஐஸ் தொழிற்சாலை

மங்களகரமான திறப்புவிழா

2009 நவம்பர் 28ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு வண.பிதா ஆனந்தகுமார் அடிகளாரால் இயந்திரங்கள் மந்திரிக்கப்பட்டு
அரசாங்க அதிபர் மதிப்புக்குரிய திரு.கணேஷ் அவர்களால் திறந்து வைக்கப்படும்.
ஒரு நாளைக்கான உற்பத்தி இயலுமை 18 தொன்.
*114, மவுண்ட் கார்மேல் வீதி, (பிரதான வீதி, மடத்தடிச் சந்திக்கு அண்மையில்), யாழ்ப்பாணம்.*
எங்களின் கூப்பிடு தூரம் 021 373 4600
வாடிக்கையாளர் கவனச் சேவை - 0777 592040 மின்னஞ்சல் - icejaffna@sltnet.lk

(92539)



### உலக எயிட்ஸ் தினம் - World AIDS Day 2009

HIV/ AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும், மனித உரிமைகளை மதித்தலும்
"Universal Access and Human Rights"

UNAIDS ன் 2008 ஆண்டறிக்கையின் படி, 2007ம் ஆண்டு இறுதிவரை உலகளாவிய ரீதியில்,
* HIV தொற்றுடன் வாழ்வோர் 33 மில்லியன்
* 2007ஆம் ஆண்டில் புதிதாக HIV தொற்றுக்குள்ளானோர் 2.7 மில்லியன்
* 2007ஆம் ஆண்டில் AIDS இறப்புக்கள் 2 மில்லியன்
* 2007ஆம் ஆண்டில் நாளாந்தம் 7,400 இற்கு மேற்பட்ட புதிய HIV தொற்றுக்கள் ஏற்பட்டுள்ளது.
- இதில் 96% இற்கு மேற்பட்ட புதிய தொற்றுக்கள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடுகளில் ஏற்பட்டுள்ளது.
- 1,000 புதிய தொற்றுக்கள் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் ஏற்பட்டுள்ளது.
- அண்ணளவாக 6,300 புதிய தொற்றுக்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்பட்டுள்ளது.

தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவில்,
* HIV தொற்றுடன் வாழ்வோர் 4.2 மில்லியன்
* 2007ஆம் ஆண்டில் புதிதாக HIV தொற்றுக்குள்ளானோர் 3,30,000
* 2007 ஆம் ஆண்டில் AIDS இறப்புக்கள் 3,40,000

* இந்தியாவில்,
* HIV தொற்றுடன் வாழ்வோர் 2.5 மில்லியன்
* 39% ஆனோர் பெண்கள், 3.5% ஆனோர் சிறுவர்கள்
* உலகிலேயே மூன்றாவது அதிகளவிலான HIV தொற்றுக்களைக் கொண்ட நாடாகவும், ஆசியாவில் அதிகளவிலான தொற்றுக்களைக் கொண்ட நாடாகவும் இந்தியா உள்ளது.

நிதியுதவி
ஆக்கம்: சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.
அனுசரணை TRRO LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.